விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 101

வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 22 புதன்கிழமை (07.11.2012)

பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி இலவச இணைப்பு உள்ளே...

# ஜெனிவா கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை; அரைவாசிப் பரிந்துரைகளை கொழும்பு ஏற்றது

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடந்த, ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் உலக நாடுகள் அளித்த 210 பரிந்துரைகளில் 110 பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக் ,கொண்டிருக்கிறது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில் தொடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் 14 ஆவது மீளாய்வு கூட்டம் நேற்றுமுன்தினம் நிறைவு பெற்றது.

ஆண்டுக்கு மூன்று கூட்டங்கள் நடைபெறும் நிலையில் ஒவ்வொரு கூட்டத்திலும் 14 நாடுகளில் மனித உரிமைகள் நிலை பற்றி அந்தந்த நாடுகள் அறிக்கை அளிக்கும். அந்த அறிக்கை தொடர்பாக பிற உறுப்பு நாடுகள் கேள்விகள் கேட்கும். அந்த கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட நாடு பதில் அளிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு இலங்கை அரசு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதன் மீது முன்கூட்டியே சில நாடுகள் கேள்விகள் எழுப்பி விட்டன. மேலும் கடந்த முதலாம் திகதி மீதமுள்ள நாடுகளும் கேள்விகள் எழுப்பின. இந்நிலையில், இலங்கை சார்பில் அமைச்சர் மகிந்த சரசிங்க விளக்கமளித்தார்.

இலங்கை வடமாகாணத்தில் விரைந்து தேர்தல் நடத்தவும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி நம்பத் தகுந்த விசாரணை தேவையென்றும் இந்தியா வலியுறுத்தியது.

தமிழர் பிரச்சினைக்கு விரைவான அரசியல் தீர்வு காண்பதே நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. போரின்போது அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டும் பற்றி உரிய விசாரணை தேவை என்றும் வலியுறுத்தப்பட்டது. மனித உரிமை மீறல் 02



வாழ்வெழுச்சிச் சட்டமூலத்தை ஆதரித்து பழைய பாராளுமன்றத்துக்கு அண்மையில், கொழும்பு - காலி வீதிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்.

# கடன் தொல்லையிலிருந்து மீளவே நண்பனைக் கொலை செய்தேன்

## செல்வம் எம்.பி.யின் மைத்துனரைக் கொன்றவர் வாக்குமூலம்

(கொழும்பு)

“மனைவியின் நகைகள் அடகு வைக்கப்பட்டிருந்தன, பெருந்தொகையான கடன் இருந்தது. இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எனவே கடன் தொல்லையிலிருந்தும், ஏனைய பிரச்சினைகளிலிருந்தும் மீள்வதற்காகவே நண்பனான சின்னத்துரை இந்திரேஸ்வரனின் கழுத்தை நெரித்துப் படுகொலை செய்தேன்” இவ்வாறு இக்கொலைச் சந்தேக நபர் பொலிஸில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு புறக்கோட்டை பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனரான 57 வயதுடைய இந்திரேஸ்வரன் காணாமல் போனார். அவர் கடந்த 31 ஆம் திகதி நானுஓயாப் 10

# நீதியரசர்கள் சங்கம் மௌனம்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கையளிக்கப்படடுள்ள நிலையில் அது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளையோ அல்லது கருத்துக்களையோ தெரிவிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதியரசர்கள் சங்கம் 02

# குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்ட சமசமாஜக் கட்சி வாபஸ் பெற்றது

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப்பிரேரணையில் கைச்சாத்திட்டதை வாபஸ் பெற்றுக்கொண்டது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயவுக்கு எதிராக குற்றப்பிரேரணையில் முன்னதாக கைச்சாத்திட்டிருந்தாலும் அதனை பின்னர் வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்ததாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜி. பத்மசிறி தெரிவித்தார்.

கட்சியின் மத்திய குழு கூடிய போது மத்திய குழு 02

# தமிழ்நாடு அகதி முகாமில் இலங்கை அகதி படுகொலை

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள கரூர் அருகேயுள்ள ராயனூர் இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்த ஜெயபிரகாஷ் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவரின் கொலையை தடுக்க முனைந்த அவரது இளைய சகோதரர் கலைச்செல்வன் என்பவரும் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயங்களுடன் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நிதி கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக ஜெயபிரகாஷ் 02

# சண்டே லீடர் முன்னாள் பிரதம ஆசிரியர் பிரட்ரிக்கா அகதியாக வெளியேறினார்

(கொழும்பு)

இலங்கையின் முன்னணிப் பத்திரிகை நிறுவனங்களில் ஒன்றான சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பதவியிலிருந்து, நீக்கப்பட்ட பிரட்ரிக்கா ஜான்ஸ், நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அவர் தமது மகன்மாருடன் நாடு ஒன்றில் அகதி அந்தஸ்தை கோரி வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் போர்க் குற்றங்கள் மற்றும் போருக்கு பின்னரான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தொடர்ந்தும் எழுதி வந்த பிட்ரிக்கா ஜான்ஸ், நிறுவன கட்டுப்பாட்டை மீறினார் என்ற 02

# காலியில் நால்வரைக் கொன்ற சந்தேகநபர்கள் நால்வரும் விடுதலை

(கொழும்பு)

காலி, போத்தல பிரதேசத்தில் நான்கு பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த நால்வரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 4ஆம் திகதி காலி - போத்தல, வலகொட பிரதேசத்தில் நான்கு பேர் சடலங்களாக பொலிஸாரினால் மீட்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணை-களை மேற்கொண்ட பொலிஸார் நால்வரை கைது செய்து கடந்த ஐந்தாம் திகதி பத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது சந்தேகநபர்களை 02

# அதிகாரப் பகிர்வுக்கு இந்திய பஞ்சாயத்து முறை: சிறந்ததென்கிறார் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ

மக்களுக்கு அதிகாரங்களை பகிரும் நோக்கில் நாட்டில் பஞ்சாயத்து முறை அல்லது கிராம ராஜ்ஜியங்கள் முறைமைக்கு மீண்டும் செல்லவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அபிவிருத்திகளை விரைவுபடுத்தவும் இலகுபடுத்தவும் முடியும் எனவும் தெரிவித்தார்.

பஞ்சாயத்து முறை, அல்லது கிராம ராஜ்ஜியங்கள் முறைமை தொடர்பில் உத்தேச பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் ஓர் அங்கமாக கலந்துரையாடப்படும் என்றும் பசில் குறிப்பிட்டார்.

தீர்வு விவகாரம் மற்றும் அதிகாரப்பகிர்வு முறைமைகள் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் விசேட ஆலோசகருமான பசில் ராஜபக்ச இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் மக்களுக்கே அதிகாரத்தை பகிரவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். இதற்கான முயற்சிகளை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதாவது இந்தியாவைப் போன்று பஞ்சாயத்து முறைமையே சிறந்ததாகும்.

ஜனாதிபதி பாராளுமன்றம் மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றுக்கான அதிகாரங்கள் என்பதுடன், கிராம சபைகள் அல்லது கிராம இராஜ்ஜியங்கள் எனப்படும் கிராமங்களை மையமாகக் கொண்ட முறைமைகளுக்கும் அதிகாரங்கள் அவசியமாகும்.

இந்தியாவில் இந்த ஐந்து மட்டங்களிலான அதிகாரப் பகிர்வு முறைமை காணப்படுகின்றது. அதேபோன்று எமது நாட்டிலும் பஞ்சாயத்து முறைமை அல்லது கிராம இராஜ்ஜியங்கள் முறைமைக்கு செல்வது சிறப்பாக அமையும் என்பதே எனது கருத்தாகும்.

இது எனது தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் இது தொடர்பில் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் இந்தப் பஞ்சாயத்து முறைமை மற்றும் கிராம இராஜ்ஜியங்கள் முறைமைகள் தொடர்பிலும் ஆராயப்படும்.

இவ்வாறன கிராம சபைகளில் கிராமத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் பிரதிநிதித்துவம் பெறுவார்கள்.


தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் தோல்விகண்டவர்கள் என அனைவரும் இடம்பெறுவார்கள்.

கிராம மட்டத்தில் எவ்வாறான அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என்பதனை இந்தக் கிராம இராஜ்ஜியங்களே தீர்மானிக்கும்.

இம்முறைமை முன்னர் எமது நாட்டில் காணப்பட்டது. அதற்கு மீண்டும் செல்லவேண்டும் என்றார்.

## பிரதம நீதியரசருக்கெதிராகக் கையெழுத்திட்டமை பிழையானதல்ல

- பிரபா கணேசன் எம்.பி.



பிரதம நீதியரசருக்கெதிராக 14 குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்திட வேண்டி கடற்பாடு அரசாங்கத்தில் இருக்கும் தென்னிலங்கை இந்திய வம்சாவளி பாராளுமன்ற உறுப்பினர்களான எங்களுக்கு உள்ளது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

நீதித்துறையில் அரசாங்கம் தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டை எதிர்கட்சிகள் ஒருபுறம் வைக்க இதில் கைச்சாத்திட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை வசை பாடுவது இன்னொருபுறம் இருக்கின்றது.

இந்திய வம்சாவளி தென்னிலங்கை பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அரசாங்கத்தின் மூலமாக கொழும்பு, களுத்துறை பகுதியிலுள்ள பல தமிழ் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யக் கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆகவே இவருக்கெதிராக கைழுத்திடுவதன் மூலமாக தமிழ் மக்களுக்கு மேலதிகமாக எதனையாவது அரசாங்கத்தின் மூலமாக பெற்றுக் கொடுக்க முடியுமா என்பதே எனது குறிக்கோள்ாகும்.

எப்பொழும் எனது நோக்கம் முதலில் தாயைக் கவனிப்போம். பின்பு தாயகத்தைக் காப்போம் என்பதேயாகும்.

குறிப்பாக தென்னிலங்கையைச் சார்ந்த இந்திய வம்சாவளி பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கைச்சாத்திட்டமையை குறை கூறுபவர்கள் எவரும் 10அடி லயன் காம்பராக்களில் வாழும் கல்வித் துறையிலும், சுகாதார துறையிலும் வீழ்ச்சியடைந்துள்ள எமது மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டுக்கொடுக்க மாற்று வழியை கூற வேண்டும்.

## அவுஸ்திரேலியா செல்ல தயாரான போது 47 பேர் கடற்படையினரிடம் சிக்கினர்

சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 47 பேர் இலங்கை கடற்படையினரால் இன்று செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் தமரா, காலிங்க என்ற இரண்டு மீன்பிடி படகுகள் மூலம் அவுஸ்திரேலியா செல்ல தயாரான வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான 47 பேர்களில் 3 பெண்களும் 5 சிறுவர்களும் அடங்கலாக 33 தமிழர்களும் 9 சிங்களவர்களும் 5 முஸ்லிம்களும் இருந்தனர்.

கைது செய்யப்பட்டோர் யாழ்ப்பாணம், வவுனியா, நீர்கொழும்பு, முல்லைத்தீவு, புத்தளம், கிளிநொச்சி, வத்தளை, சிலாபம், மட்டக்களப்பு, கற்பிட்டி, மாவனெல்ல, மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளுக் கென குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## சீனாவில் மா சே துங் படத்தை இளைஞர்கள் கிழித்ததால் பரபரப்பு

கம்யூனிஸ சீனாவின் தந்தையாகக் கருதப்படும் மா சே துங்கின் படங்களை கிழித்தெறிந்த இளைஞர்களால் அந்நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தலைநகர் பெய்ஜிங்கில் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டிருந்த மா சே துங்கின் படங்களை கிழித்த 4 இளைஞர்கள், அச்செயலைப் புகைப்படம் எடுத்து இணையதளத்திலும் வெளியிட்டுள்ளனர். சீனாவில் அதிகார மாற்றம் தொடர்பாக அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் நடைபெற்று வரும் நேரத்தில் நடைபெற்றுள்ள இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கம்யூனிஸ ஆட்சியால் இளைஞர்கள் வெறுப்படைந்துள்ளதையே இந்த சம்பவம் காட்டுவதாக பேச்சு எழுந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக சீனாவில் இணையதளத்தில் காரசாரமான கருத்துகளும் பதிவேற்றப்பட்டுள்ளன. மா சே துங்கின் புகைப்படத்தை கிழித்த இளைஞர்களில் ஒருவரை அந்நாட்டு பொலிசார் கைது செய்தனர். ஒருநாள் சிறையில் வைத்து விசாரித்த பின்னர் அவரை பொலிசார் விடுவித்தனர். இதனிடையே தங்களுக்கு கொலை மிரட்டல்கள் வருவதாக அந்த இளை ஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சீன மக்கள் குடியரசை நிறுவியவரும், அந்நாட்டில் கம்யூனிஸ்ட் புரட்சியை முன்னின்று நடத்தியவருமான மா சே துங்கின் படத்தை அவமரியாதை செய்யும் வகையில் நடந்து கொள்வது கடும் தண்டனைக்குரிய செயலாக முன்னர் இருந்தது.

## சண்டே லீடர்...

குற்றச்சாட்டின் பேரில் சண்டே லீடர் நிர்வாகத்தினால் கடந்த மாதம் பதவி நீக்கப்பட்டார்.

இந்தநிலையில் நாட்டில் இருந்து வெளியேறுவதே தமக்கு பாதுகாப்பை தரும் என்ற அடிப்படையிலேயே தாம் வெளியேறியுள்ளதாக பிரட்ரிக்கா ஜான்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

பிரட்ரிக்கா ஜான்ஸ் 2009 ஆம் ஆண்டு சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலைசெய்யப்பட்ட பின்னர் அந்த செய்தித்தாளின் பிரதம ஆசிரியராகச் செயற்பட்டு வந்தார்.

## தமிழ்நாடு அகதி...(தொடர்)

கொலை செய்யப்பட்டதாக இந்திய ஊடகச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த கொலை தொடர்பாக அகதி முகாமை சேர்ந்த நிலாகரன், சுதாகரன் ஆகியோரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, நேற்று முன்தினம் மண்டபம் முகாமிலிருந்து 135 அகதிகள் வரை திருச்சி மற்றும் விழுப்புரம் முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதன்படி, விழுப்புரத்தில் உள்ள சின்ன சேலம் முகாமுக்கு 60 பேரும் திருச்சி மாவட்டத்தில் உள்ள வாழவந்தான் கோட்டை முகாமுக்கு 75 பேருமாக மாற்றியனுப்பப்பட்டுள்ளனர். இதுதவிர 20 பெண்கள் மற்றும் 28 சிறார்கள் உள்ளடங்களாக 69 இலங்கை அகதிகள் இராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள முகுந்தராயர் சத்திரம் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மன்னாரைச் சேர்ந்த குறித்த அகதிகள் புகலிடம் கோரிய நிலையில், தனுஸ் கோடியை அடைந்ததுடன், பொலிஸாருக்கும் அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## காலியில் நால்வரை...(தொடர்)

தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் சந்தேக நபர்கள் நால்வரும் கொட்டாவ சுற்றுலா நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

போத்தல பொலிஸாரினால் சம்பவம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பொலிஸ் அறிக்கையை ஆராய்ந்த நீதிபதி சம்பவத்திற்கும் கைது செய்யப்பட்டவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என தெரிவித்து அவர்களை விடுதலை செய்தார்.

## ஜெனிவாக் கூட்டத்தில்....

குற்றச்சாட்டு மீதான விசாரணைக்கு காலவரையறை தேவையென்றும் இந்தியா வலியுறுத்தியது. தமிழர் பகுதிகளில் தனியார் நிலத்தை இராணுவம் திரும்பவும் ஒப்படைக்க வேண்டுமென்றும் இந்தியா கோரிக்கை விடுத்தது.

அதே போல் இராணுவ உயர் பாதுகாப்பு வலையங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் எனவும் தெரிவித்தது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்றும் இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க பிரதிநிதி, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதே நேரத்தில், இலங்கைப் போரின் போது காணாமல் போனதாகக் கூறப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஸ்திரேலியா வலியுறுத்தியது.

இலங்கை பிரச்னைக்கு தீர்வு காணத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கனடா கோரியது.

இதனிடையே, விளக்கம் அளித்த இலங்கை வெளியுறவுத்துறைச் செயலாளர் மகிந்த சமரசிங்க, இலங்கைத் தமிழர்களுக்கான திட்டங்களை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்தார். மேலும், கடந்த பத்து மாதங்களாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். போருக்குப் பின்னரான மறுசீரமைப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பெண்களின் பாதுகாப்புக்கு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், தமிழர் பகுதிகளில் பணியாற்றும் காவல்துறைக்கு பொது மக்களுடனான தொடர்பை எளிதாக்கும் வகையில் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்ட 99 நாடுகள் பல்வேறு பரிந்துரைகளை அளித்தன. இது குறித்து நேற்றுமுன்தினம் இலங்கை அரசு பதில் அளித்தது. அதில் 100 பரிந்துரைகளை நிராகரித்த இலங்கை அரசு 110 பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

## நீதியரசர்கள் சங்கம்...(தொடர்)

அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் ஆராய்வதற்காக நீதியரசர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் கூடிய போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாக சங்கம் அறிவித்துள்ளது.

## குற்றப்...(தொடர்)

உறுப்பினர்கள் பல்வேறு நிலைப்பாட்டை கொண்டிருந்தமையினால் கையொப்பத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்

# கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரத்தில் தலையிட முடியாது

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் சம்பிக்க உரை

கூடங்குளம் அணுல்மின் நிலையம் அமைப்பது குறித்த விவகாரத்திலும் தலையிடமுடியாது. இந்தியாவில் நடைபெறும் போரட்டத்திலும் தலையிட முடியாது. அது சுதந்திர நாடு என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட மின் பாவணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், யாழ். மாவட்டத்திற்கு தேசிய மின்வலைப்பின்னல் மூலம் இந்த ஆண்டு நிறைவிற்குள் நூறு வீதம் முழுமையாக மின்சாரம் வழங்கப்படும். யாழ். மாவட்டத்திற்கு கிளிநொச்சியில் இருந்து லக்ஷ்பான மின்சார இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில், சுன்னாகத்தில் அனல் மின்சாரம் அமைக்கப்பட்டு வருகின்றது. வடபகுதியில் முழுமையாக மின்சாரத்தினை வழங்குவதற்கான உப நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை மின்சாரம் வழங்குவதற்கு இரட்டை வழி அமைக்கப்பட்டு வருகின்றது. கிளி-நொச்சியில் இருந்து சுன்னாகம் வரை தேசிய மின்வலை பின்னலூடாக மின்சாரம் வழங்குவதற்கு மின்சார உப நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களினால் மின்சாரம் கட்டுப்படுத்தப்படுகின்றது. தேசிய ரீதியாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களுக்கு நாங்கள் தடை போட முடியாது.

அத்துடன், இலங்கை மின்சார சபையில் தமிழ் ஊழியர்களுக்கான வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும். மற்றும் பாடசாலைகளில் கணினி பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மின்சார சபையினால் கட்டணங்கள் அறவிடப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது என்றார்.




# நுளம்பு பெருக இடமளித்த பாடசாலை, நிறுவனம் மீது நடவடிக்கை

மட்டக்களப்பு மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வகையில் சுற்று சூழலை வைத்திருந்த ஆறு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவதற்கு மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை அடுத்தே இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இவற்றில் வங்கி ஒன்றும் பிரபல தேசிய பாடசாலையொன்றும் இரு அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்களும் அடங்குகின்றது.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக சூழல் பாதுகாப்பு பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாநகரத்துக்கு உட்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், வங்கிகள் உட்பட சுமார் 150 நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டது என மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக சூழல் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஜே.என்.ஜயசுந்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ள நிலையிலும் உரிய முறையில் சிலர் கடைப்பிடிப்பதில்லை எனவும் பொறுப்பதிகாரி ஜே.என்.ஜயசுந்தர தெரிவித்தார்.

இதன் காரணமாக நுளம்பு பெருக்கம் ஏற்படுவதற்கு ஏதுவாகவுள்ள இடங்கள் அடையாளங் காணப்படுமிடத்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கொழும்பு - சியோல் நேரடி விமான சேவை அடுத்த மாதம் ஆரம்பம்

## தென்கொரியத் தூதுவர் அறிவிப்பு

கொழும்பிற்கும் தென் கொரியாவின் தலைநகரான சியோலிற்கும் இடையிலான நேரடி விமான சேவை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் என இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் ஜோங்மூன் சோய் அறிவித்தார்.

தென் கொரியாவின் தேசிய தினம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள தென் கொரியா தூதுவராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நிகழ்வு கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டோலொன்றில் இடம்பெற்றது. இதன்போதே இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் ஜோங் மூன் சோய் இந்த அறிவிப்பை விடுத்தார்.

பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பிற்கும் சியோலிற்கும் இடையிலான நேரடி விமான சேவை இடம்பெற்றது. எனினும் சில காரணங்களினால் 1984ஆம் ஆண்டு இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.



இருப்பினும் தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராஜந்திர ரீதியிலான உறவு சிறந்த முறையில் உள்ளது. இதனாலேயே இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என தென் கொரியா தூதுவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்வி, தகவல் தொழிநுட்பம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்ற பல துறைகளுக்கு தென்கொரியா தொடர்ந்து இலங்கைக்கு உதவும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அதிபர் மீது தாக்குதல்

பாடசாலை அதிபர் மீது இனந் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாவனல்ல பகுதியுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் மீதே நேற்றுமுன்தினம் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாணவர் ஒருவரைக் கண்டித்ததை அடுத்தே அந்தப் பாடசாலை அதிபர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மாவனல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# தொலைபேசியில் ஆபாசம்: மூவருக்கு அபராதம்

கையடக்க தொலைபேசியில் ஆபாச படங்கள் உள்ளிட்ட வீடியோவை பதிவு செய்து வைத்திருந்த இளைஞர்கள் மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கல்கிசை நீதிமன்ற பிரதான நீதவான் நிரோசா பெர்னணடோவே 6000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இரத்மலானை, கல்கிசை மற்றும் திஸ்ஸமாரகம ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்களுக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் கலாசார சீர்கேடுகளை உருவாக்கும் வகையில் இயங்கும் இணையதளங்கள் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# கொழுந்து பறிக்கச் சென்ற பெண்களை குளவிகள் கொட்டின

## 30 பேர் வைத்தியசாலையில்

பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிவத்தை தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 30 பெண் தொழிலாளர்கள் குளவிகளின் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

கெலிவத்தை தோட்டத்தின் இரண்டாம் இலக்க தேயிலை மலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த இப்பெண் தொழிலாளர்களை இக்குளவிகள் சூழ்ந்துகொட்டியுள்ளன.

# இன்றைய இராசி பலன் (07.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 22ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : ஆயிலியம் மாலை 7.27 வரை அதன் பின் மகம்
**திதி** : அட்டமி பிற்பகல் 1.59 வரை. அதன் பின் நவமி
**சுபநேரம்** : 4.35 - 6.05 **இராகுகாலம்** : 12.05 - 1.35
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் உற்சாகம், தூரதேச செய்தி, இனசனக் கொண்டாட்டம்
**இடபம்** : நற்செய்கை, புதிய தொழில் முயற்சி, உறவினர் சந்திப்பு
**மிதுனம்** : காரியத் தடை, தொழில் சஞ்சலம், தெய்வ பிரார்த்தனை
**கடகம்** : சுபகாரியச் செய்கை, அவசர முடிவு, திடீர் பிரயாணம்
**சிங்கம்** : தொழில் விருத்தி, குடும்ப குதூகலம், தேகசுகம் நன்று
**கன்னி** : பணவரவு, குடும்ப அக்கறை, மற்றவர்களுக்கு உதவுதல்
**துலாம்** : தாமத செயற்பாடு, நண்பர்கள் சந்திப்பு, பொருள் வரவு
**விருச்சிகம்** : காரிய சித்தி, பிரயாண நன்மை, போசன சுகம்
**தனுசு** : புதுத் தொழில் ஆர்வம், தெய்வ யாத்திரை, விருந்துபசாரம்
**மகரம்** : மன அமைதி, அதிக ஆர்வம், அந்நியர் சந்திப்பு
**கும்பம்** : வீண் செலவு, உணர்ச்சி வசம், பெரியோர் அறிவுரை
**மீனம்** : நினைத்த காரிய சித்தி, உல்லாசப் பயணம், பிறரால் மதிக்கப்படுதல்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# 13ஆவது திருத்தம் வாபஸ் பெறப்பட மாட்டாது அதிகாரங்களும் குறைக்கப்பட மாட்டாது

**- இந்திய வெளிவிவகார அமைச்சர்**

"பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை குறைப்பதற்கோ அல்லது அதனை வாபஸ் பெறுவதற்கோ இலங்கை அரசாங்கம் திட்டமிடுவதாக எந்த அறிகுறிகளும் எமக்குக் கிடைக்கவில்லை" இவ்வாறு இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் கூறினார்.

புதுடில்லியில் இடம்பெற்ற பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர றிம் சங்கத்தின் பன்னிரண்டாவது வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு ஆதரவு அளிப்பேன் என்றே நான் கருதுகிறேன். பதின்மூன்றாவது அரசியல் திட்டத்தை மீண்டும் வலியுறுத்தி சம்பிரதாய பூர்வமாகவும், உத்தியோக பூர்வமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் அவ்வப்போது நாம் கூறி வந்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத்திருத்தம் போதியதல்ல என்றும், அதற்கு அப்பாலும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்றும் சில தரப்பினர் கோருகின்றனர். பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் இன்னமும் அமுலில் இருக்கிறது அது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதற்கும் அப்பால் அதிகாரங்களை பெறவேண்டிய தேவை இருக்கிறது என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனைச் செய்வது சாத்தியம் என்றால் எந்தளவுக்கு அது சாத்தியமாகும்? இதனை மேலும் ஆராய்வதற்கு எந்த விதிமுறை கைக்கொள்ளப்பட வேண்டும்? என்பது பற்றியெல்லாம் ஆராயப்படவேண்டியுள்ளது.

இது இலங்கையில் உள்விவகாரமாகும் இருந்தாலும் நாமும் இதில் சம்பந்தப்படுகிறோம் ஆனால் அது இலங்கையின் உள்நாட்டு விவகாரமாகும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

# மக்கள் மனதில் நீதித்துறை பற்றிச் சந்தேகம் ஏற்படாதவாறு நிலைமைகள் கையாளப்பட வேண்டும்

**- ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் பௌத்தமத பீடாதிபதிகள்**

"செயலாற்று அதிகாரம் மிகு தரப்பு, சட்டவாக்கசபை, நீதித்துறை ஆகிய மூன்று நிர்வாக கட்டமைப்புக்களும் ஒன்றைவிட ஒன்று மேலானது என்ற விடயத்தில் அக்கறை கொள்ளாமல், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டும் என்ற நிலை வரும்பொழுது இந்த மூன்று நிறுவனங்களுமே ஒன்றைவிட ஒன்று கீழானவையல்ல" என்று ஜனநாயகக் கொள்கையை மதிக்கும் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

இவ்வாறு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க மீதான குற்றவியல் பிரேரணையை மீளாய்வு செய்யுமாறு கோரி மூன்று மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மல்வத்தை, அஸ்கிரிய, அமரபுர நிக்காய ஆகியவற்றின் பீடாதிபதிகளே ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர் அதில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது

மனித நாகரிகத்தோடு சம்பந்தப்பட்டதே சட்டமாகும். அது மனிதர்களின் நலன்களுக்காக பின்பற்றப்பட வேண்டியவை. ஆதலால் பௌத்த சட்ட திட்டங்களின் சாராம்சம் என்னவென்றால் தனி நபர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, பிழையானவற்றை பின்தள்ளி, சரியானவற்றை பரப்ப வேண்டியதே கடமையாகும்.

இதன்மூலம் சமூகத்தின் [illegible] னைப் பேண வேண்டும் [illegible] குலத்தின் நலன்களை [illegible] அனைவரினதும் உ[illegible] கடமை என்னவென்றால் ச[illegible] மாகவும் பாரபட்சமின்[illegible] படுத்தப்படக்கூடிய சூழ்[illegible] ஒன்றை ஏற்படுத்துவ[illegible]

தற்போதைய ஜனநா[illegible] அமைப்பில் பொதுமக்கள் உ[illegible] அனைவரினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கு பாரியளவில் பங்களிப்பு செய்த நீதித்துறை சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாளும்போது கவனமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. நீதித்துறையில் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குத் தீங்கு விளைவிக்காமல் கவனமாகவும், பொறுமையாகவும் விடயங்கள் கையாளப்பட வேண்டும். எனவே நீதித்துறை சம்பந்தமாக மக்களின் மனங்களில் சந்தேகங்களை ஏற்படுத்தும் ஓர் சூழ்நிலையை உருவாக்குவது சரியானது அல்ல என்பதே எமது கருத்தாகும்.

இவ்வாறும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

# மதுரை அகதி முகாம்களில் இலங்கை அகதிகள் அவதி

தமிழ்நாட்டின் மதுரை அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் கவலிப்பாரற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக இந்தியாவின் 'தி ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1983ம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து அதிகளவான இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் பலர் தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மாநில அரசாங்கம் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாறாக அகதி முகாம்களில் வாழ்வோருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாகவும், உதா சீனமான போக்கைப் பின்பற்றி வருவதாகவும் தி ஹிந்து குற்றம் சுமத்தியுள்ளது.

1983ம் ஆண்டில் அமைக்கப்பட்ட சில முகாம்களில் மக்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

மழை காலங்களில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# குருநகர் கடற்கரையில் கடல் அட்டைகளுடன் 10 மீனவர்கள் கைது

யாழ். குருநகர் கடற்கரையில் 2,608 கடல் அட்டைகளுடன் 10 மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக நீரியல்வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த கடற்றொழில் பரிசோதகர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.

குருநகர் கடற்பரப்பில் நேற்றுக் காலை 2 படகுகளில் 10 மீனவர்கள் கடல் அட்டைகளை பிடித்துக்கொண்டு கரைக்கு வந்த போதே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[illegible] படகில் 1,050 கடல் அட்டைகளுடன் 5 மீனவர்களும் மற்[illegible] படகில் 1,558 கடல் அட்டைகளுடன் 5 மீனவர்களும் இருந்ததாகவும் அவர் கூறினார்.

கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், இழுவை வலைகள், இயந்திரங்கள், கடல் அட்டைகளுடன் மீனவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

படகுகள், இழுவை வலைகள், இயந்திரங்கள், கடல் அட்டைகளுடன் 10 மீனவர்களையும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வட மாகாண நிர்வாக புதிய சட்ட ஆலோசகராக எஸ்.எல்.ஏ.ரஹீட் நியமனம்

வட மாகாண நிர்வாகத்துக்கான புதிய சட்ட ஆலோசகராக சட்டத்தரணி எஸ்.எல்.ஏ.ரஷீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தினை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

இலங்கை சட்டக் கல்லூரியில் தனது கற்கையினை முடித்துக் கொண்டு, 1996ஆம் ஆண்டு வெளியேறிய ரஷீட் - தற்போது பிரபல சட்டத்தரணியாக கடமையாற்றி வருகின்றார். அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இவர் அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகிக்கின்றார்.

இதேபோன்று, தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையும் இவர் செயற்பட்டார்.

வட மாகாண நிர்வாகத்துக்கான புதிய சட்ட ஆலோசகராக நியமனம் பெற்றுள்ள சட்டத்தரணி எஸ்.எல்.ஏ.ரஷீட் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார்.

# ஓமானில் இலங்கைப் பணிப்பெண் எஜமானால் சித்திரவதை

ஓமான் தலைநகர் மஸ்கட்டில் பணிபுரியும் இலங்கை பெண்ணொருவர், தொழில் வழங்குனரினால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த முலிய நோனா (45 வயது) என்ற பெண் தனது தொழில் வழங்குனரிடம், பணிபுரிந்தமைக்கான சம்பளத்தை கேட்டுள்ளார்.

அதன்பின்னர் தொழில் வழங்குனர், குறித்த இலங்கைப் பணிப்பெண்ணை சித்திரவதை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011 ஆண்டு, தொடக்கம் மஸ்கட்டில் குறித்த தொழில் வழங்குனரின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்து வருவதாகவும் அவர் தொடர்ச்சியாக துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்துன் புறுத்தலின் காரணமாக தனது உடலில் காயங்கள் ஏற்பட்டுள்ள தாக சித்திரவதைக்குள்ளாக்கப் பட்ட இலங்கைப் பெண், தனது நண்பியிடம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மஸ்கட்டில் உள்ள இலங்கை தொழில் ஆலோசகர் அலுவலக அதிகாரிகள் தகவல் அறிந்து, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண்ணை சிகிச்சைக்காக அரச வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தொழில் வழங்குனரை அழைத்து கேட்டபோது, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும், பெண்ணின் அனைத்து மருத்துவ செலவுகளையும் ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்டதாகவும் கூறப்பட்டது.

# முன்னாள் நீதியரசரை எதிர்க்கட்சிகளின் போராட்டங்களில் இணைக்க முடியாது

எதிர்க்கட்சிகளினால் கூட்டாக இணைந்து நடத்தப்படும் போராட்டங்களில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை இணைத்துக் கொள்ளப் போவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு பாதகம் ஏற்படும் வகையில் சரத் என் சில்வா பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்தில் தீர்ப்புக்களை வழங்கினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்யும் நோக்கில் நடத்தப்படும் போராட்டங்களில் சரத் என் சில்வாவை இணைத்துக் கொள்ள முடியாது என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

சரத் என் சில்வாவை போராட்டங்களில் இணைத்துக் கொள்வதனை ஐக்கிய தேசியக் கட்சியே பிரதானமாக எதிர்த்ததாகத் தெரியவருகிறது. 17ம் திருத்தச் சட்டத்தை மீள அமுல்படுத்தல் மற்றும் நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை நிலைநாட்டல் ஆகியன தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாத தடை சட்டத்தில் கைதான இருவர் விடுதலை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பெரிய தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரவிக்குமார் என்பவர் 20.04.2009 ஆம் திகதி முல்லைத்தீவு, பொக்கனை பகுதியிலும், தெல்லிப்பளை, வீமன்காமம் பகுதியை சேர்ந்த ரவிசங்கர் 17.05.2009 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியிலும் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் இருவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபரொருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான செல்வரத்தினம் சசிகரன் என்பவர் கடந்த 13.05.2012 ஆம் திகதி நெளுக்குளம் நலன்புரி முகாமில் வைத்து புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வழக்கு யூலை மாதம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த சந்தேகநபரினால் யாழ். மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ரெமீடியஸ் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கினை எதிர் வரும் 20ஆம் திகதி வரை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் ஒத்திவைத்தார்.

# பொன்னாலையில் மீள்குடியேற்றம்

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்கள் சிறிது சிறிதாக விடுவிக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த வாரம் பொன்னாலை, மாதகல் மேற்கு ஆகிய பிரிவுகளில் உள்ள பாதுகாப்பு வலயங்களில் குடியமர கடற்படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

அதனையடுத்து, நேற்றுமுன்தினம் பொன்னாலை வரதராஜ பெருமாள் கோயிலைச் சூழவுள்ள பகுதியில் மக்களின் வீடுகளை அவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு காலை இடம்பெற்றது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்படையின் அதி காரிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மக்களிடம் வீடுகளைக் கையளித்துள்ளனர்.

# இலங்கை நிலைமைகள் குறித்து பிரித்தானியா விமர்சனம்

இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து பிரித்தானிய விமர்சனம் வெளியிட்டுள்ளது.

நீதித்துறைச் சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் பாதிக்கப்படுவது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான பிரித்தானிய பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் தண்டனை விதிக்கும் பொறிமுறைமை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என கோரியுள்ளது.

கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

# யுத்த கால குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை

**- இராணுவம்**

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் தொடர்ச்சியாக விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்காக இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஐவர் அடங்கிய இராணுவ நீதிமன்றமொன்று நிறுவப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இவ்வாறு இராணுவ நீதிமன்றம் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்து வருவதாக முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரி வித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிகரெட் பக்கற்றுக்களில் எச்சரிக்கை படம்:**

# எதிர்ப்பு நடவடிக்கை எடுத்தாலும் திட்டம் அமுலாக்கப்படுவது நிச்சயம்

**- புகையிலை மற்றும் மதுசார அதிகார சபை**

சிகரெட் பக்கற்றுகளில் படங்கள் மூலம் எச்சரிக்கை செய்யும் முறைமையை கொண்டுவரவுள்ள அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக புகையிலை கைத்தொழில் நிறுவகம் வழக்கு தாக்கல் செய்த போதிலும் தேசிய புகையிலை மற்றும் மதுசார அதிகார சபை படங்கள் மூலம் எச்சரிக்கை செய்யும் திட்டத்தை அமுலாக்க போவதாக தெரிவித்தது.

சுகாதார அமைச்சருக்கு இந்த திட்டத்தை அமுல்படுத்த அதிகாரம் இல்லை என்பதலால் அவரை இதற்கு அனுமதிக்க கூடாது என கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இலங்கை புகையிலை கூட்டுத்தாபனம் அண்மையில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

சிகரெட் பக்கெற்றுக்களில் பட எச்சரிக்கை பொறித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒகஸ்ட் 8ஆம் திகதி வெளியானது. சடப்படி இந்த திகதியிலிருந்து 30 நாட்களின் பின் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்பட்ட வேண்டும். ஆனால் இது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த வழக்கின் தீர்ப்பு இன்று வரையிலும் வராத நிலையில் புகையிலை மற்றும் மதுசார அதிகார சபை தலைவர் காலோ பொன்சேகா வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்த போவதாக கூறியுள்ளார்.

சிகரெட் பக்கெற்றுகளில பட எச்சரிக்கை பொறிக்கும் சட்டத்தை கொண்டு வர ஒப்புக் கொண்டு புகையிலை கட்டுப்பாட்டு சமவாயத்தில் கையொப்பமிட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

# தேவைப்படும் இடங்களுக்கு மட்டும் செயற்கை மழை

நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தித் தேவையான இடங்களுக்கு மாத்திரம் மழையை பெற்றுக் கொடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் போவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது குறித்து சீனாவுடன் தற்போது பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஹம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை கொள்ளையடிக்கும் அரச உத்தியோகத்தர்கள் குறித்து ஆராய விசேட பிரிவை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# நண்பனின் மோதிரத்தை திருடியவருக்கு விளக்கமறியல்

நண்பர்கள் இருவர் மதுபானச் சாலையில் மது அருந் திவிட்டு ஒருவருடைய மோதிரத்தை மற்றவர் திருடிச்சென்ற சம்ப வம் ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நண்பர்கள் இருவர் சாவகச்சேரி பகுதியில் உள்ள மதுபான சாலையொன்றுக்கு சென்று மது அருந்தியுள்ளனர்.

இதன் போது இவ் இருவரில் ஒருவர் போதை தலைக்கேறிய நிலையில் இருந்துள்ளார். இதன் போது உதவிசெய்யும் நோக்கில் நிதானம் இழந்தவரின் கையில் இருந்த சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான மோதிரத்தை மற்றைய நபர் திருடிச் சென்றுள்ளார்.

சாவகச்சேரி பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்ட வீசாரணையில் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன் திருடப்பட்ட மோதிரத்தையும் திரும்பக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது விளக்கமறியலில் வைக்கும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மட்டு. ஏறாவூரில் மாணவி தற்கொலை

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்திவெளியில் பாடசாலை மாணவியொருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளார்.

சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியொருவரே இரசாயன உயிர்க் கொல்லியை உட்கொண்டதனால் மயக்கமுற்று வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களில் மரணமானதாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாஸ்கரன் நிரோஜினி என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த இந்த மாணவிக்கு இளைஞன் ஒருவன் தொடர்ந்தேர்ச்சையாக விரும்பத்தகாத காதல் இம்சைகளைக் கொடுத்து வந்தமையால் குறித்த மாணவி மன உளைச்சலுக்குள்ளாகி இருந்துள்ளனர்.

இந்நிலையில் இதுகுறித்து சந்திவெளிப் பொலிசுக்குச் சென்று பெற்றோரும் அந்த மாணவியும் முறையிட்டிருந்தார்கள் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை குறித்த மாணவி வழமைபோன்று பாடசாலை சென்று வீடு திரும்பியிருந்தார் என்றும் இன்று அவர் விரதம் அனுஷ்டித்திருந்தார் என்றும் உறவினர்கள் கூறினர்.

மாலை விரதம் முடிவுக்கு வருகின்ற தறுவாயில் இந்த மாணவி வாந்தி எடுத்த வண்ணம் கட்டிலில் வீழ்ந்து கிடந்ததனால் உடனடியாக அருகிலுள்ள சந்திவெளி பிரதேச வைத்திய சாலையில் சேர்ப்பித்து 20 நிமிட நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

# போதை பொருட்கள்: ஹட்டனில் இருவர் கைது

ஒருதொகை போதை பொருட்களுடன் இரு சந்தேகநபர்கள் ஹட்டன் வலய குற்ற ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து கஞ்சா, புகையிலை தூள், என்சி தூள் 4 1/2 கிலோகிராம் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சுகாதார அமைச்சால் தடை செய்யப்பட்டுள்ள இந்த போதைப் பொருள் தோட்டப் பகுதிகளில் விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 07ஆம் திகதி புதன்கிழமை

# ஜெனீவாவில் இலங்கை ஒரு தடையைத் தாண்டிவிட்டது.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் முடிவடைந்த ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் உலக நாடுகள் முன்வைத்த 210 பரிந்துரைகளில் 110ஐ இலங்கை ஏற்றுக் கொண்டிருக்கிறது. 99 நாடுகள் பங்குபற்றிய இந்தக் கூட்டத்தில் சில மேற்கு நாடுகள் இலங்கை மீது காரசார மான குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றன. முதலாம் திகதி இந்தக் கூட்ட ஆரம்பத்தின்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக இந்தியா குற்றச்சாட்டு வைத்தது. ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் இந்தியா மௌனம் சாதித்தமை அதன் இராஜதந்திர நிலைப்பாட்டின் மீள்பார்வையை தெளிவாக விளக்குகிறது.

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள், மீள் குடியேற்றம், காணாமல் போனவர்களை கண்டு பிடித்தல், தமிழர் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் இந்த மீளாய்வுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான குற்றப்பிரேரணையை அமெரிக்கா முன்வைத்தது. இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் குற்றப் பிரேரணைக்கு இருபத்தி நான்கு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. இலங்கைக்குச் சார்பாக பதினைந்து நாடுகள் வாக்களித்தன. இதில் ஏழு நாடுகள், இஸ்லாமிய முகாமைச் சேர்ந்தவை. வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்த எட்டு நாடுகளில், நான்கு இஸ்லாமிய முகாமைச் சேர்ந்தவையாகும். அமெரிக்காவின் குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த ஒரே காரணத்துக்காக வேறு சில நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்த சாத்தியங்களும் இருந்திருக்கலாம்.

அடுத்தவருடம் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினையில் ஏற்படும் அல்லது ஏற்படவிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதற்கு முன்னோடியாகவே இந்தப் பருவகால மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை தொடர்பான பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டிருக்கின்றன. கடந்த மார்ச் மாதம் அமெரிக்கப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் இலங்கை சர்வதேச கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது.

ஜெனீவாவில் கடந்த மார்ச் மாதம் இலங்கை மீது குற்றப் பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவே கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகிவிட்டது. இலங்கை அரசியல், சமூக முனைகளில் கற்றுக் கொண்டவற்றை பாடங்களாகக் கொண்டு, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிபாரிசுகளை முன்வைப்பதற்காகவே இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 27இல் அன்றைய பிரதமர் ரணில் விக்ரசிங்காவிற்கும், புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி முள்ளிவாய்க்காலுக்குள் யுத்தம் முடிவுக்கு வரும்வரை கற்றுக் கொண்ட பாடங்களை முன்வைத்தே சமூக நல்லிணக்கத்திற்கான சிபாரிசுகள் முன்வைக் கப்பட்டன.

ஆனால் இன முரண்பாட்டையும், இன முறுகலையும் கூர்மையடையச் செய்த சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்று அரை நூற்றாண்டுக்கு மேல் கடந்து விட்டது. 1951ஆம் ஆண்டு அன்றைய பிரதம்ர் டி.எஸ். சேனநாயக்கா, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைத்தார். 1956ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். 1973இல் பல்கலைக்கழக அனுமதிக்காகத் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இது தமிழ் மாணவர்களைப் பாதித்தது.

1956ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிரான ஜூலை இன சங்காரம்வரை ஆறு பாரிய தாக்குதல்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. வரலாற்றுத் தவறுகள் விட்டுச் சென்ற பாடங்களைக் கற்றுக் கொள்ளாமல் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது கஷ்டமான காரியந்தான். இருந்தாலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் இன சௌஜன்யத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தக்கூடிய நல்ல பல சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் கூட நல்லிணக்க ஆணைக்குழுவை அமுல்படுத்துமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் "தடியெடுத்தவன் தண்டக்காரன் என்பது போல" மற்ற நாடுகளில் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட அமெரிக்கா பிரிட்டன் போன்ற மேற்குலகு நாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைப்பது தேவையற்ற செயல்தான்.

இருந்தாலும், இனத்துவ மேலாதிக்கத்தின் எதிர்விளைவுகள் தான் இன முரண்பாடுகளுக்கு அச்சாரமாக அமைந்தது என்ற உண்மையை மறந்து விடக்கூடாது. சமாதான பூர்வமாக தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டமையும், ஆயுதங்கள் அரங்கிற்கு வர ஒரு காரணியாக அமைந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆனாலும் முரண்பாட்டுக்கு காரணமான பிரச்சினைகள் வெடிகுண்டுகள் போல் இன்னமும் இருக்கவே செய்கின்றன.

அமெரிக்காவிலிருந்து கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்று விஸ்வநாதன் ருத்ரகுமாரன் குரல் எழுப்புகிறார். பிரிட்டனில் உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பின் வண பிதா இம்மானுவேலும், சுரேன் சுரேந்திரனும் மீண்டும் தமிழீழம் பற்றிப் பேசுகின்றனர். தமிழ் நாட்டில் ஜெயலலிதா, கருணாநிதி போன்ற முக்கிய அரச தலைவர்கள் மட்டுமல்ல சீமான், திருமாவளவன், நெடுமாறன், வை. பாண்டியன் போன்ற உதிரிகளும் அவ்வப்போது சத்தம் போடுகின்றனர்.

எனவே யுத்தம் முடிவுக்கு வந்தாலும் யுத்தத்தை மூட்டிவிட்ட அம்சங்கள் இன்னமும் அழிந்து விடவில்லை. இவை கண்ணிவெடிகள் போல் இன்னமும் நிலத்துக்கு கீழ் புதைக்கப்பட்டிருக்கின்றன. இவை தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்படாவிட்டால் மீண்டும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழலைத் தவிர்க்க முடியாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல

"மே ரட்டே மினிஸ்ஸு, தனிகர கெலின்னே பிஸ்ஸு" என்று ஆரம்பிக்கப்படும் ஒரு சிங்கள பாடல் இருக்கின்றது. இந்நாட்டு மக்கள் பைத்தியக்காரத் தனமாகவே நடந்து கொள்கிறார்கள் என்பதே அந்த பாடல் வரியின் பொருளாகும்.

இன்று நாட்டின் அரசியல் களத்தில் இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கும் போது இந்தப் பாடல் அவ்வளவு மோசமானதாகவும் கருத முடியாது. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் மக்களின் பிரச்சினைகள் முக்கியமில்லை. எல்லோருக்கும் ஆளும் கட்சியிலோ அல்லது எதிர்க் கட்சியிலோ தமக்கு இருக்கும் பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்வது தான் முக்கியமானதாக இருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். சர்வாதிகாரம் என அவர்களே வர்ணிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விட தமக்குள்ளே இருக்கும் பிரச்சினைகள் தான் அவர்களுக்கு பாரிய பிரச்சினைகளாக தெரிகின்றன. அதேபோல் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நாட்டின் மிகவும் முக்கியமான பிரச்சினையாக அவர்களே கூறும் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கத்தை வற்புறுத்துவதை விட தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயம் முக்கியமானதாக இருக்கிறது.

எனவே அக் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் அந்த விடயத்தில் தர்க்கித்துக் கொண்டும் காலத்தை கடத்திக் கொண்டும் இருக்கின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்தாலும் அதன் உறுப்புக் கட்சிகள் தெடர்ந்தும் தனித் தனி கட்சிகளாக இருக்கவே போகின்றன என்ற உண்மையை அக் கட்சிகளின் தலைவர்கள் கண்டு கொள்ளவில்லை போலும்.

'வாழ்வின் எழுச்சி' எனப்படும் திவிநெகும சட்ட மூலம் தொடர்பாக நாட்டில் உருவாகியிருக்கும் நிலைமை மேற்படி பாடலை மேலும் எமக்கு ஞாபகம் ஊட்டிக் கொண்டே இருக்கிறது. நன்றாக இந்த சட்ட மூலத்தை படித்துப் பார்த்தால் தமிழ் கடசிகளும் இடதுசாரி கட்சிகளும் ஏன் இதனை இவ்வளவு கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்தச் சட்ட மூலத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மீண்டும் சுவீகரித்துக் கொள்ளப் போவதாக தமிழ் மற்றும் இடதுசாரி கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால் இச் சட்ட மூலத்தால் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பதிக்கப்படும் வகையில் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் சுவீகரித்துக் கொள்ளப் போவதாக வாதிட முடியாது.

உதாரணமாக, வறுமை ஒழிப்புக்காக 'திவிநெகும' திணைக்களம் செயற்படும் என இச்சட்ட மூலத்தில் கூறப்படுகிறது. வறுமை ஒழிப்பானது அரசியலமைப்பின்படி மாகாண சபைகளின் பொறுப்புக்களில் ஒன்றாகும். இது மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசாங்கம் சுவீகரித்துக் கொள்வதாகும் என தமிழ் மற்றும் இடதுசாரி கட்சிகள் வாதிடுகின்றன. வறுமை ஒழிப்பானது அரசியலமைப்பின் மாகாண சபை பட்டியலில் உள்ள ஒரு விடயம் தான். ஆனால் திவிநெகும சட்ட மூலத்தின் மூலமானது மத்திய அரசாங்கம் வறுமை ஒழிப்பிற்காக செயற்படுவதனால் சிறுபான்மை மக்கள் எவ்வாறு பாதிக்கப்படப் போகிறார்கள்?

அதேவேளை, பெறுபேறுகள் எவ்வாறாக இருப்பினும் வர்த்தக அமைச்சு வறுமை ஒழிப்புக்காகவென செயற்படவில்லையா? அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தின் நோக்கங்களில் வறுமை ஒழிப்பும் ஒன்று அல்லவா? அதுவும் அதிகார பரவலாக்கலுக்கு முரணானதா? மாகாண சபைகளின் அதிகாரங்களுடன் தொடர்புடைய திவிநெகும சட்ட மூலத்தில் உள்ள மற்றொரு விடயம் தான் உணவுப் பாதுகாப்பு என்ற விடயம். இதுவும் மாகாண சபைகளின் அதிகாரங்களுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும் மேலும் பல சட்டங்கள் மூலம் மத்திய அரசாங்கமும் உணவு பாதுகாப்பு பணியில் ஈடுபட சட்டம் இடம் கொடுத்து இருக்கிறது. இதனால் அதிகார பரவலாக்கல் முறைக்கு என்ன பாதிப்பு ஏற்படப் போகிறது.

இவற்றைப் போல் அபிவிருத்திக்கு தேவையான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பை ஏற்படுத்தல், சமூக பாதுகாப்பு வலைப் பின்னலை ஏற்படுத்துதல் போன்றவை தான் மாகாண சபை அதிகாரங்களுடன் மோதும் விடயங்களாக திவிநெகும சட்ட மூலத்தில் உள்ளன. சட்டத்தின் கண்ணோட்டத்தில் இவை மாகாண சபைகளின் அதிகாரங்களை மீறுவதாக வாதிடலாம். ஆனால் இவை ஏனைய பல சட்டங்களிலும் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் தேசிய வரவு செலவு திட்டத்திலும் உள்ளவையே தவிர சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதிக்கும் விடயங்கள் அல்ல.

அதேவேளை உத்தேச திவிநெகும திணைக்களத்தில் இணைக்கப்படவிருக்கும் சமுர்த்தி அதிகார சபை, தக்ஸின அதிகார சபை மற்றும் உடரட்ட அதிகார சபை ஆகியவை ஏற்கனவே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அந்த அதிகார சபைகளிடம் உள்ள மேற்படி அதிகாரங்களையே திவிநெகும திணைக்களத்திடம் வழங்கப்படவிருக்கிறது.





வாழ்வின் எழுச்சி சட்ட மூலத்தை ஆதரித்து நேற்று கொழும்பில் காலி வீதிச் சந்திக்கண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப் பட்ட படம்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்கள் 92 பேருக்கு நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நியமனங்களைப் பெறும் பயிலுர் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் அவர்கள் இன்று வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இதற்கென ஏறபாடு செய்யப்பட்ட நிகழ்வில் சுமார் 92 பட்டதாரிப்பயிலுனர்கள் இந்நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள். இன்று சுமார் 92 வரையான பட்டதாரி பயிலுனர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுவதற்கான நியமனங்களைப் பெறுகின்றனர்.

இதேவேளை இவ் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி திட்டத்தினூடாக மக்கள் மிகப் பெரும் பயனைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது ஆனால் அத்திட்டத்தின் தொடர் செயற்பாடுகள் குறித்து சர்ச்சைகள் நிலவி வருகின்றன இதேவேளை.வடமாகாணத்தில் சுமார் ஒரு இலட்சம் வரையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சமுர்த்தி நிவாரணங்களை பெற்று வருகின்றனர். அதில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் சுமார் முப்பது வீதமான மாணவர்கள் இத்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றனர்.

ஆகவே இத்திட்டங்கள் வெற்றிகரமாக தொடர்ந்து நடைமுறைப் படுத்தும் சூழல் உருவாகுமிடத்து வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் உறுதுணையாக அமையும் என குறிப்பிட்டார் பொருளாரதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் வறிய மக்களின் துன்பங்களுக்கு உறுதுணையாக அமையும் திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் அளப்பெரும் பணியை ஆற்ற தாயாராகவுள்ள பட்டதாரி பயிலுனர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும். பொருளாரதார மேம்பாட்டுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் எம்மக்களுக்கு அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப் படும் திட்டங்களை.

விரைவாக மக் கள் மத்தியில் கொண்டு செல் வதற்கு இவர்களின் செயற்பாடு கள் உறுதுணையாக அமைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட பயனாளிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் வங்கிக் கணக்கு புத்தகங்களை வழங்கி சமுர்த்தி திட்டத்தினையும் ஆரம்பித்துவைத்தார்.

# புலிகள் வெறும் கெரில்லா போராட்ட இயக்கம் மட்டுமல்ல

## - முல்லைப் படையணித் தளபதி

புலிகளை வெறுமனே ஓர் கெரில்லா போராட்ட இயக்கமாக கருத முடியாது என முல்லைத்தீவு 68ம் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

வலுவான சர்வதேச வலையமைப்பைக் கொண்டதும், சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட ஓர் தீவிரவாத இயக்கமாக புலிகளை நோக்க வேண்டும்.

போர் சூனிய வலயத்திலிருந்து தாக்குதல்களை மேற்கொண்டு பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்த வேண்டுமென்ற நோக்கில் இறுதிக்கட்ட போரின் போது புலிகள் சூழ்ச்சித் திட்டம் தீட்டினர் என்றும் சொன்னார்.

# வெள்ளவத்தையில் போலி துப்பாக்கியைக் காட்டி சங்கிலி பறிப்பு

வெள்ளவத்தையில் தனியாகச் சென்ற பெண்ணிடம், போலித் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதுடன் அவரின் தங்கச்சங்கிலியைப் பறித்துச் சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

அப்பெண் சத்தப்போட்டதும், இதனை அவதானித்த பிரதேச வாசிகள் சந்தேகநபரை மடக்கிப் பிடிக்க பின்தொடர்ந்தபோது போலி துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளதுடன் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபரை வெள்ளவத்தை பொலிஸார் துரத்திச் சென்று கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

# எம். வி.சண். சீ கப்பலின் தலைவருக்கு கனேடிய நீதிமன்றம் பிணை அனுமதி

கனடாவுக்கு 492 இலங்கை தமிழர்களை ஏற்றிச்சென்ற எம் வி சண் சீ கப்பலின் தலைவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள லெசி ஜனா இமானுவேல் என்பவர் கடந்த திங்கட்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவர் மீது மனித கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த கப்பல் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் 6 பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட 3வது நபரான இவர் இமானுவேல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் 45,000 டொலர் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கனடாவில் இருந்து வெளியேறுவதற்கு இவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிணை வழங்க லுக்கான காரணத்தை தெரிவிக்க பிரிட்டிஸ் கொலம்பியா உயர்நீதி மன்றத்தின் உதவி நீதிபதி ஒஸ்டின் கலென் மறுத்துவிட்டார்.

ஏற்கனவே இதே குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்த நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பிநாயகம் ராஜரட்ணம் ஆகியோரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சண் சீ கப்பல் 2010 ம் ஆண்டு ஆகஸ்ட் 13 ம் திகதியன்று கனடாவை சென்றடைந்தது. அதில் 380 ஆண்கள் 63 பெண்கள் 49 சிறுவர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

# நாடாளுமன்றம் நீதிமன்றத்தைப் போன்று இயங்க வேண்டும்

## - எதிர்க்கட்சிகள்

நாடாளுமன்றம் நீதிமன்றத்தைப் போன்று இயங்க வேண்டுமென எட்டு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதிய இடதுசாரி கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட எட்டு கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரணை செய்யப் படும் வரையில் நாடாளுமன்றம் நீதிமன்றத்தைப் போன்று இயங்க வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தின் தேவைகளுக்காக நீதிமன்றக் கட்டமைப்பின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கக் கூடாது.

18ம் திருத்தச் சட்டம் மூலம் நீதிமன்றின் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. 17ம் மற்றும் 13ம் திருத்தச் சட்டங்கள் முழுமையான அமுல் படுத்தப்பட வேண்டுமென எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன.

அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தையும் நீதியையும் இல்லாதொழித்து வருகின்றது என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தையும் நீதியையும் இல்லாதொழித்து வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

செய்ய முடியாதது எதுவும் இல்லை என்ற மமதையில் அரசாங்கம் இயங்கி வருகின்றது. இன்று அரசாங்கம் ஓர் மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஜனநாயகம், நீதி மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை உதாசீனம் செய்து வருகின்றது. 17ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்து 18ம் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தியது.

நீதிமன்றத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப நாம் அனைவரும் அணி திரள வேண்டுமென அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கோட்டே ரயில் நிலையத்தில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்வின் எழுச்சிச் சட்டமூலம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல .....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே தமிழ் கடசிகளும் இடதுசாரி கட்சிகளும் அரசாங்கம் திவிநெகும சட்ட மூலத்தின் மூலம் ஏதோ தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக போர் பிரகடனப்படுத்திதைப்போல் அதனை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று கங்கணங்கட்டிக் கொண்டு செயற்படுவது வெறும் அரசியல் நோக்கம் கொண்ட செயலே.

ஆனால் திவிநெகும சட்டத்தின் படி திவிநெகும திணைக்களம் எந்தவொரு நபரையும் அழைத்து அவரது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சொத்து விவரங்களை பற்றிய விவரங்களை கோரலாம். அவர் அவற்றை வழங்காதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இது அதிகார பரவலாக்கல் முறையோடு சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அது தனிப்பட்டவர்களின் பொருளாதார சுதந்திரத்தை பாரதூரமாக பாதிக்கும் விடயமாகும்.

அதைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு எதிர்க் கட்சியிலுள்ள அரசியல் கட்சிகள் அர்த்தமற்ற வகையில் அதிகார பரவலாக்கல் பாதிக்கப்படப் போவதாக வாதிட்டுக் கொண்டு இருக்கின்றன.

அதேபோல் இந்தச் சட்ட மூலத்தால் அரசாங்கம் சொல்வதைப் போல் நாட்டு மக்களுக்கு பெரிதாக எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, அபிவிருத்திக்கு தேவையான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சமூக பாதுகாப்பு வலைப் பின்னலை ஏற்படுத்துதல் போன்ற அலங்கார வார்த்தைகளைக் கொண்ட எத்தனையோ சட்டங்களை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் நாட்டில் வறுமை ஒழிக்கப்படவில்லை.

சமுர்த்தி வங்கிகளில் இருக்கும் பல ஆயிரம் கோடி ரூபா பணத்தை அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே இந்த சட்டத்தின் நோக்கம் என்றும் எதிர்க் கட்சிகள் வாதிடுகின்றன. அதுவும் சரியான வாதமாக தெரியவில்லை. சமுர்த்தி வங்கிகளில் இருக்கும் பணத்தை அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தான் இந்த சட்டத்தின் நோக்கம் என்றால் இந்த சட்டம் இல்லாமலேயே அது நடைபெறுகிறது. சமுர்த்தி அதிகார சபை ஏற்கனவே அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அமைச்சின் கீழ் தான் இருக்கிறது. அதனை யாரால் தான் தடுக்க முடியும்?

திவிநெகும சட்ட மூலத்தை திருத்தாமல் நிறைவேற்ற வேண்டும் என்றால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தயார் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியிருக்கிறார். சர்வஜன வாக்கெடுப்பு நடந்தால் அரசாங்கம் எவ்வாறோ வெற்றி பெறும்.

ஆனால் தற்போதைய நிலையில் நாடளாவிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தேர்தல் திணைக்களத்திற்கு குறைந்தது 100 கோடி ரூபாவாவது தேவைப்படும்.

# இலங்கையரை உடனடியாக திருப்பியனுப்பவும்: ஆஸி.எதிர்க்கட்சியின் குடிவரவு அமைச்சர்



படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருவோரை கையாள்வதில் கிலாட் அரசாங்கம் மென்போக்கை கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டியுள்ள அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிஸன், அவுஸ்திரேலியாவுக்கு வரும் இலங்கை புகலிடம் கோருவோரை உடனடியாக திருப்பியனுப்ப இன்னுமொரு விமானத்தை வாடகைக்கு அமர்த்த வேண்டுமென கூறியுள்ளார்.

“மனித கடத்தலில் ஈடுபடுவோருக்கு கிலாட் அரசாங்கத்தின் போக்கு பெருமளவு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. அரசாங்கம் நாட்டின் எல்லைகளை பாதுகாக்க தவறியுள்ளது. உடனடியாக திருப்பி அனுப்பப்போவதாக அரசாங்கம் கூறியிருப்பது உண்மையானால் இன்று இலங்கைக்குப் போகும் விமானம் ஒன்று இருக்க வேண்டும். அப்படியில்லையாயின் இதுவும் அரசாங்கத்தின் ஒரு தந்திரம் எனவே கொள்ளப்பட வேண்டும்” என கூறினார்.

“கடந்தவாரம் கிறிஸ்மஸ் தீவிலிருந்து 26 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்” என குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவான் கூறினார். இலங்கையில் ஒரு படகை கடத்திக்கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு வந்த 15 பேரும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஒரு விமானத்தில் ஆட்களை திருப்பி அனுப்பிவிட்டதால் மட்டும் உடனடியாக திருப்பி அனுப்பும் கொள்கையை செயற்படுத்துவதாக கூறமுடியாது என எதிர்க் கட்சி உறுப்பினரான ஸ்கொட் மொறிஸ் கூறினார்.

“இலங்கைப் படகுகள் இங்கு அடிக்கடி வருவது போல இலங்கைக்கு விமானங்களும் அடிக்கடி போனால்தான் இது உண்மையாகவே அரசாங்கத்தின் கொள்கை” என நாம் கருதமுடியுமென அவர் கூறினார்.



# கார்த்திகை மாத தீப மகிமைகள்...

கார்த்திகை மாதம் என்றாலே, கண்களையும் கருத்தினையும் குளிர்விக்கும் தீபங்களின் பேரெழில்தான் நினைவுக்கு வரும். அத்தகைய கார்த் திகையின் சிறப்புகளை இங்கு காண்போம்.

**திருப்பதியில் கார்த்திகை**

விஷ்ணு திருத்தலங்களில் மிகவும் புகழ் பெற்ற திருமலைத் திருப்பதியில் கார்த்திகை தீபத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின் றனர். அன்றைய தினம் பெருமாள் வீதியுலா வருவார். பின் திருப்பு மண்டபம் என்ற இடத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிப் பார். அதன்பின் கோவிலுக்கு எதிரே உள்ள ஆலய நுழைவாயிலுக்கு அருகே சொக்கப் பானை கொளுத்துவதைக் கண்டு களிப்பார். அதன்பின் ஆலயம் செல்வார். அப்போது பக்தர்களுக்கு லட்டும், கார்த்திகைப் பொரியும் பிரசாத மாகத் தருவார்கள்.

**கல்பாத்தி**

கேரள மாநிலம், பாலக்காடு நகரின் ஒரு பகுதிதான் கல்பாத்தி. காசியில் பாதி கல்பாத்தி என்பது இத்தலச் சிறப்பு. அதற்குக் காரணம், காசியில் உள்ளதுபோல் இங்கேயும் காசி விஸ்வநாதர் ஆலயம் அமைந்துள்ளது. அங்கு போலவே ஆறு கால பூஜையும் செய்கின்றனர். அதுவுமின்றி, காசியிலுள்ள கங்கையைப்போலவே இங்கும் வற்றாத ஆறு ஓடுகிறது.

இக்கோவில் திருத்தேரை நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டுச் சிற்பிகள் சிறப்பாகச் செய்துள்ளனர். இக்கோவிலின் பெரிய விழா தேர்த் திருவிழாதான். ஐப்பசி மாதம் கடைசி மூன்று நாட்கள் தேர்த் திருவிழா நடக்கும். இத்தேர் கல்பாத்தியைச் சுற்றியுள்ள 18 கிராமங்களையும் வலம் வந்து கார்த்திகை மாத முதல் நாளன்று நிலைக்கு வரும். இவ்விழாவைக் காண தமிழக மக்களும் சென்று வருவார்கள்.

**நெற்பொரி, அவல்**

வேதாரண்யம் சிவாலயத்தில் எலி ஒன்று வசித்து வந்தது. இது தினமும் கருவறையில் ஏற்றி வைத்துள்ள தீபத்திற்கான நெய்யை உண்ணும். அப்படி ஒருநாள் உண்ணும்போது திரி தூண்டப் பட்டு பிரகாசமாக எரிந்தது. இப்படி தீபத்தை எரிய வைத்த எலியை சிவன் மறுபிறப்பில் மாபலி மன்னனாகப் பிறக்கச் செய்தார். அம்மன் னன் உடலில் எலிக்கு தீபச் சுடரினால் ஏற்பட்ட தீக்காயமும் அப்படியே இருந்தது. தீப்புண் குணமாக மன்னன் சிவாலயத்தில் நெய் தீபம் ஏற்றி வழிபட்டு வந்தான். அப்போது மாபலி சக்கரவர்த்திக்கு கார்த்திகை தீபத்தன்று காட்சி கொடுத்து அருளினார் சிவன். நெய்தீபம் எரியத் துணைபுரிந்த எலியை பலியாக்கினார் சிவபிரான். நாமும் நெய் தீபம் ஏற்றலாமே.

**காஞ்சியில் கார்த்திகை**

சைவர்கள்போலவே வைணவர்களும் கார்த்திகைத் தீபத் திரு நாளைக் கொண்டாடு கின்றனர். மோட்சபுரியில் ஒன்றான காஞ்சிபுரத்தில் உள்ள தீபப் பிரகாசர் என்ற விளக்கொளிப் பெருமாள் ஆலயத்தில் கார்த்திகை தீப விழாவை சிறப்பாகச் செய்கின்றனர்.

பிரம்மன் சரஸ்வதியை விட்டு விலகி இருந்த நேரத்தில் ஒரு யாகம் செய்தார். அதனால் கோபம் கொண்ட சரஸ்வதி வேகவதி நதியாக மாறி வந்து தடுத்தாள். பிரம்மன் யாகத்தைக் காக்க எண்ணிய பெருமாள் பெரிய ஒளிப் பிழம்பாக மாறினார்.

அந்த ஒளிப்பிழம்பின் பெயரே தீபப் பிரகாசர். இவர் ஒளி வடிவில் இருந்து பிரம்மனின் யாகத்தைக் காக்கவும் இடையூறுகளைத் தடுக்கவும் முதற்கடவுளான சிவ லிங்கத்தை நிறுவி வழிபட்டார்.

அந்த லிங்கத்தின் பெயரே விளக்கொளி நாதர், தீயேஸ் வரர். இவ்வாலயத்தில் கார்த் திகை தீபத்தன்று தீபமேற்றி சிறப்பு வழி பாடுகள் செய் கின்றனர். இப்ப டித்தான் பெருமாள் தீபப் பிரகாசராகத் தோன்றியதுடன் தீயேஸ் வரரையும் பிரதி'டை செய்தார்.

**காசியிலும் தீபப் பிரகாசர்**

காசியில் மணிகர்ணிகா துறை அருகில் மணிகர்ணிகேஸ் டிவரர் ஆலயம் உள்ளது. இக்கோவிலின் அருகேயுள்ள வீட்டு முற்றத் தில் தீபப் பிரகாச லிங்கம் உள்ளது. இதனை ஜோதி தீபேஸ்வரர் என அழைப்பர். இச் சந்நிதியில் கார்த்திகை தீபத்தன்று தீபம் ஏற்றி வழிபட்டால் எல்லா வகையான செல்வங்க ளும் பெறலாம் என்பது நம்பிக்கை. தேவலோக அழகி களான அப்சரஸ் பெண்கள் இங்கு வந்து தீபமேற்றி வழிபட்டு பெரும் பேறு பெற்றனர் என்கின்றனர்.



**திருப்பெருந்துறை (ஆவுடையார் கோவில்)**

ஆத்ம ஒளியை அதிகரிக்கச் செய்யும் திருவாசகத்தை அருளியவர் மாணிக்க வாசகர். இவரை ஈசன் குருவாக வந்து திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஆட்கொண்டார்.

இக்கோவிலில் ஆகம தத்துவங்களை விளக்கும் வகையில் தீபங்களை அமைத்துள்ளனர். இது வேறெங் கும் இல்லாத அமைப்பாகும்.

எல்லா நட்சத்திரங்களையும் காட்ட முடியாது. எனவே, 27 நட்சத்திரங்கள் கரு வறையில் தீபமாக எரிகின்றன. உலகைப் படைத்து, காத்து, அழித்து வழிநடத்தும் மும்மூர்த்திகளைக் காட்டும் வகையில் மஞ்சள், பச்சை, சிவப்பு என மூன்று வண்ணக் கண்ணாடி சட்டங்கள் இட்ட மூன்று விளக்குகள் கருவறையில் எரிகின்றன. 36 தத்துவங்களைக் குறிக்கும் தீபமாலை விளக்கை தேவ சபையில் ஏற்றி வைத்துள் ளனர்.

ஐந்து வகை கலைகளைக் குறிக்கும் ஐந்து விளக்குக ளை கருவறையில் ஒன்றின்கீழ் ஒன்றாக ஏற்றி வைத்துள்ளனர்.

51 எழுத்துகளைக் கொண்டது வர்ணம். இதனைக் குறிக்கும் 51 விளக்குகள் கருவறைமுன் உள்ள அர்த்தமண்டபத்தில் உள்ளன. உலகங்கள் 87. இதனைக் குறிப்பதற்கு கனக சபையில் குதிரைச் [illegible] 87 விளக்கு கள் உள்ளன.

11 மந்திரங்களைக் குறிக்கும் 11 விளக்குகளை நடனசபையில் ஏற்றி வைத்துள்ளனர். இப்படி 27 நட்சத்திரங்கள், மும்மூர்த்திகள், 36 தத்துவங்கள், ஐந்து கலைகள், 51 வர்ணங்கள், 87 உலகங்கள், 11 மந்திரங்கள் என ஒவ்வொன்றையும் விளக்கும் வண்ணமுள்ளன இவ்விளக்குகள். இப்படிப்பட்ட அதிசய அமைப்பு ஆவுடையார் கோவிலின் மட்டுமேதான் உள்ளது.



**லட்சதீபம்**

ஒரு லட்சம் விளக்குகளால் ஆலயத்தை அலங்கரிப்பது லட்சதீபம் எனப்படும். மயிலாப்பூ ரில் ஆண்டுதோறும் லட்சதீப விழா நடக்கிறது. திருக்கழுக்குன்றத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை லட்சதீபம் ஏற்றுகின்றனர்.

**மாவிளக்கு**

அம்மன் ஆலயங்களில் நோய்தீர வேண்டிக் கொண்டு மாவிளக்கு ஏற்றுவார்கள். அரிசி மாவில் வெல்லம் போட்டு, இளநீர் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கி, நடுவில் குழித்து நெய் ஊற்றி திரி போட்டு ஏற்றுவது மாவிளக்கு.

கச்சபேஸ்வரர் ஆலயம் காஞ்சியில் உள்ளது. இங்கு கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த மாவிளக்கு தீபத்தை தலையில் வைத்துக்கொண்டு ஆலயத் தைச் சுற்றி வருவர்.

**விருட்ச தீபம்**

மர வடிவ விளக்குகளை ஏற்றினால் மரமே ஒளி விடுவது போல இருக்கும். சிதம்பரம், திருவண்ணா மலை, குருவாயூர் ஆலயங்களில் இந்த விருட்ச தீபத்தைக் காணலாம்.

**நெற்பொரியால் மலை தீபம்**

திருவண்ணாமலையில் கார்த்திகை மாதம் மலைமேல் தீபம் ஏற்றுவது விசே'ம். வீடுகளில் அன்று நெற்பொரிய-ில் வெல்லப்பாகு கலந்து கூம்புபோல செய்து, அதன் உச்சியில் அகல் தீபம் ஏற்றுவர். இது மலைமீதே தீபம் ஏற்றி வழிபடுவது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

**தீபாராதனை**

ஆலயத்தில் சுவாமிமுன் பூஜை நேரத்தில் தீபங்களைச்

03)"கல்வியே அழியாச் செல்வம்" என்ற கட்டுரைப் பகுதியில் கல்விச் செல்வத்தின் அழியாத் தன்மையையும், அதன் சிறப்புக்களையும் எடுத்துக்கூறிய வள்ளுவர் ஔவையார் ஆகியோரது கருத்துக்களை [illegible]த்து விளக்குக.

04"விடியுமா? என்ற சிறுகதையினூடாக சமூகத்திற்கு முன்வைக்கப்படும் செய்திகளையும் கருத்துக்களையும் ஆதாரத்துடன் விளக்குக.

(05)'முத்தொள்ளாயிரம்' என்ற இலக்கியத்தினூடாக மூவேந்தர்களின் யானைப் படையின் சிறப்பும் அவர்கள் மீது கொண்ட பெண்ணின் காதல் உணர்வும் சித்திரிக்கப்படுமாற்றினைத் தருக.

(06)"நிழலின் நினைவு" என்ற கவிதையில் கவிஞர் கூற முற்படும் கருத்தினையும், அதை எடுத்துக் காட்ட கையாண்ட உத்தியினையும் விபரிக்குக.

(07)நாட்டார் பாடல் என்றால் என்ன எனக் கூறி அவை வாழ்க்கையோடு எந்தளவுக்கு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது என்பதை பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை டிசெம்பர் 2012
### நேர அட்டவணை

**11.12.2012 செவ்வாய்**
காலை 8.30 - 11.30
பௌத்த சமயம் (11), சைவநெறி (12), கத்தோலிக்க சமயம் (14), கிறிஸ்தவம் (15), இஸ்லாம் (16)

**12.12.2012 புதன்**
காலை 8.30 - 11.30, பகல் 12.30 - 2.30 - தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

**13.12.2012 வியாழன்**
காலை 8.30 - 11.30 - வரலாறு (33) (வினாத்தாள் - 11)
பகல் 12.30 - 1.30 - வரலாறு (33) (வினாத்தாள் - 1)

**14.12.2012 வெள்ளி**
காலை 8.30 - 11.30
தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும் (80), விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் (81)
கடற்றொழிலும் உணவுத் தொழில்நுட்பவியலும் (82), ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் (83)
நுண்கலை (84), மனைப் பொருளியல் (85), சுகாதாரமும் உடற்கல்வியும் (86),
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் (87), மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (93)

**15.12.2012 சனி**
காலை 8.30 - 11.30 - விஞ்ஞானம் (34) (வினாத்தாள்- 11)
பகல் 12.30 - 1.30 - விஞ்ஞானம் (34) (வினாத்தாள் - 1)

**17.12.2012 திங்கள்**
காலை 8.30 - 10.30 - கணிதம் (32) (வினாத்தாள் - 1)
பகல் 12.30 - 3.00 - கணிதம் (32) (வினாத்தாள் - 11)

**18.12.2012 செவ்வாய்**
காலை 8.30 - 11.30 - சங்கீதம் (கீழைத்தேயம், மேலைத்தேயம், கர்நாடகம்), நடனம் (சுதேச, பரதம்)
காலை 8.30 - 9.30, காலை 9.45 - 11.45, சித்திரம்
பகல் 1.15 - 3.15 - சித்திரம் (43)
பகல் 12.30 - 3.30 - இலக்கிய நயம், நாடகமும் அரங்கியலும்

**19.12.2012 புதன்**
காலை 8.30 - 9.30 - ஆங்கிலமொழி (31) (வினாத்தாள் - 1)
காலை 9.45 - 11.45 - ஆங்கில மொழி (31) (வினாத்தாள் - 11)

**20.12.2012 வியாழன்**
காலை 8.30 - 11.30 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (60), புவியியல் (61)
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் (62), முயற்சியாண்மைக் கற்கை (63)
இரண்டாம் மொழி (சிங்களம்) 64, இரண்டாம் மொழி (தமிழ்) (65)

இப்பத்திரிகை இன்.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 07.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

07-11-2012
# கல்வி ஒளி
தமிழ்நாதம்
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 21

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## நாடகமும் அரங்கியலும் (மாதிரி வினாத்தாள்)


### பகுதி - I (தொடர்ச்சி)

**பின்வருவனவற்றுள் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

36.அருகில் உள்ளபடம்
1.பேரா. க. சிவத்தம்பி 2.பேரா. க. கணபதிப்பிள்ளை
3.பேரா. சு. வித்தியானந்தன் 4.பேரா. சி. மௌனகுரு



37.இந்தப்படம் எவ்வகை கூத்தினை குறிக்கின்றது?
1.வடமோடி 2.தென்மோடி 3.சிந்துநடை 4.மகுடி



38.இந்தப்படம் குறிப்பிடும் நாடக வகை
1.குறியீடு 2.யதார்த்தம் 3.இசை 4.சிறுவர்



39.படத்தில் காணப்படும் கலைஞர்
1.மெற்றாஸ் மயில் 2.வீ.வீ.வைரமுத்து
3.கலையரசு சொர்ணலிங்கம் 4.தைரியநாதன்



40.அருகில் உள்ள படம் குறிப்பது
1.சடங்கு 2.கூத்து 3.நடனம் 4.பலே



### பகுதி II

**பின்வருவனவற்றுள் முதலாவது வினாவிற்கும் ஏனைய ஏதாவது நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**01)பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1.ஈழத்து நாடகத் தலைமுறையொன்றின் தாய் என பேராசிரியர் கா. சிவத்தம்பியினால் வர்ணிக்கப்படும் நாடகவியலாளர் யார்? (01 புள்ளி)
2.வீ.வீ.வைரமுத்துவின் நாடக சபை யாது? (01 புள்ளி)
3.மாதவி ஆடிய ஆடல்களின் எண்ணிக்கை? (01 புள்ளி)
4.சமூக மாற்றத்திற்கான நூலின் ஆசிரியர். (01 புள்ளி)
5.தமிழ் நாடகத்தின் தந்தை. (01 புள்ளி)
6.கூடிவிளையாடு பாப்பா எனும் நாடகத்தின் ஆசிரியர். (01 புள்ளி)
7.'மழை' நாடகம் பேசும் பிரச்சினை. (01 புள்ளி)
8.பலே நடனம் பிரபலமாக ஆடப்படும் நாடு. (01 புள்ளி)
9.ஒளி விதானிப்பில் சிவப்பு வர்ணம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் இரண்டு தருக. (02 புள்ளி)
10.கூத்து என்றால் என்ன? (02 புள்ளி)

(02)

1.அபிநயம் என்றால் என்ன? (02 புள்ளி)
2.நால்வகை அபிநயங்களினை குறிப்பிடுக. (04 புள்ளி)
3.இவை நாடகத்தில் எவ்வகையில் முதன்மை பெறுகின்றன என்பதை விளக்குக. (06 புள்ளி)

(03)

1.நாடகம் என்றால் என்ன? (02 புள்ளி)
2.நாடகத்தின் பிரதான பண்புகள் என்ன? (04 புள்ளி)
3.அது ஏனைய கலைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (06 புள்ளி)

(04)

1.நாடகத்தில் பாத்திரங்களின் வேட உடை ஒப்பனையின் அவசியம் யாது? (06 புள்ளி)
2.'எந்தையும் தாயும்' நாடகத்தில் வரும் சங்கரப்பிள்ளை பாத்திரத்திற்கு எவ்வாறு வேட உடை ஒப்பனையை மேற்கொள்வீர்? (06 புள்ளி)

(05)

1.நடிப்பிற்கு அவசியமான பயிற்சிகள் யாவை? (03 புள்ளி)
2.அவை ஒவ்வொன்றும் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன? (04 புள்ளி)
3.அரங்க விளையாட்டுக்கள் நடிப்பிற்கு உதவும் வகையினை விபரிக்க. (05 புள்ளி)

(06)

1.விழிப்பு நாடகத்தின் ஆசிரியர் யார்? (02 புள்ளி)
2.இந் நாடகத்தில் வருகின்ற பாத்திரங்கள் எவை? (04 புள்ளி)
3.நாடகம் வெளிப்படுத்தும் பிரச்சினையினை விபரிக்க. (06 புள்ளி)

(07)

1.தயாரிப்பாளர் மேற்கொள்ளும் ஒழுங்கு நடவடிக்கை பற்றி யாது குறிப்பிடுவீர்? (06 புள்ளி)
2.நாடக முழுமை பற்றிய நெறியில் பார்வைத்திறன் எவ்வாறு அமைய வேண்டும் என விபரிக்க. (06 புள்ளி)

தொகுப்பு: எஸ்.ரி. அருள்குமரன். B.A.(Hons) M.A.
எஸ்.ரி.குமரன் B.A.(Hons.)M.A.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## தமிழ்மொழியும் இலக்கியமும் - I (மாதிரி வினாத்தாள்)

ஆசிரியர்: ந. ஆனந்தசபேசன் நேரம்: 1 மணித்தியாலம்

**சகல வினாக்களுக்கும் விடை தருக.**

01.பெருஞ்செல்வம் இல்லத்து நல்கூர்ந்தார் போல. இங்கு **நல்கூர்ந்தார்** என்பது,

1.இரக்கமுள்ளவர் 2.நல்லவர் 3.வள்ளல் 4.வறுமைப்பட்டவர்

2.வையகம் எல்லாம் எமது என்று எழுதுமே. இங்கு **வையகம்** என்பதன் ஒத்த பதம் அல்லாதது,

1.உலகம் 2.பூமி 3.வானம் 4.பார்

3.பாணன் யாழ் எடுத்து வாசித்தான். இங்கு **பாணன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்

1.பாணி 2.பாடினி 3.பாணிச்சி 4.பாங்கி

4.மலையுச்சியில் நிலவிய சீதளத்தை உணர்ந்தேன். இங்கு **சீதளம்** என்பதன் எதிர்ச்சொல்

1.வெப்பம் 2.குளிர்ச்சி 3.காற்று 4.தட்பம்

5.அறத்தால் வருவதே இன்பம். இங்கு **அறம்** என்பதன் எதிர்ச்சொல்.

1.மறம் 2.புறம் 3.தானம் 4.புண்ணியம்



05)அசுத்தமான சூழலே நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணியாக உள்ளது. உமது பிரதேசத்தில் நீண்ட காலமாக குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் உள்ளது என்பதை சுட்டிக்காட்டி மாநகர சபைக்கு தொழில் முறைக் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

முத்தமிழ் மன்ற செயலாளர் என்ற வகையில் உமது பாடசாலையில் நடைபெற்ற தமிழ்த் தின விழா பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## தமிழ் மொழியும் இலக்கியமும் - III (மாதிரி வினாத்தாள்)

**(இறுதிக்கட்ட எதிர்பார்ப்பு வினாக்களுடன்)** **நேரம்: 2 மணி**

01)சுருக்கமான விடை தருக.

1.நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள் தொறும் நாடு கெடும்.
அ)இக்குறட்பாவில் இடம்பெறும் அணி யாது?
அ)இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

2.'முத்தொள்ளாயிரம்' என்ற சிற்றிலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?
3.உலகக் காதல் பற்றி பாரதியாரின் கருத்து யாது?
4.முன்னோக்கு என்ற கவிதையை எழுதியவர் யார்? அது இடம்பெறும் நூல் எது?
5."ஐயா, நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள் போலும்!" -இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது.
6.துமி, துளி ஆகிய இரண்டுக்கும் உள்ள கருத்து வேறுபாடு யாது?
7.நல்ல உறவையும் போலி உறவையும் வேறுபடுத்துக.
8.மாதின் கண்ணின் அழகைக் கண்டு எவை எல்லாம் அஞ்சுகின்றன?
9.கிட்டியடித்தல் பாடலில் மருந்துக்கு பயன்படும் மரப்பட்டைகள் எவை?
10.கலம்பகம் என்றால் என்ன? இது யாருடைய புகழைப் பாடுகின்றது?

**02)பின்வரும் பாடல்களின் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் அடி கோடிட்ட தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.**

1.<u>மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்</u>
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல் பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்.

2.<u>ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்</u>
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
பெருஞ்செல்வம் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ் செல்லும் பேருமென் நெஞ்சு!.

3.<u>மல்லல் மறுகில் மடநா குடனாகச்</u>
<u>செல்லும் மடிவிடை</u> போற் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

4.<u>மஞ்சுமஞ் சுங்கைப் பரராஜ சேகரமன்னன் வெற்பில்</u>
பஞ்சுமஞ் சும்பதப் பாவைநல் வாய்படை வேள்பகழி
அஞ்சுமஞ் சுங்கம லஞ்சுமஞ் சுங்கட லஞ்சு மஞ்சும்
நஞ்சுமஞ் சும்வெற்றி வேலோ வுனது நயனங்களே

(02)பின்வரும் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

அ.இன்று நாடளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெற்று வருகின்றது. இதை தடுக்கு முகமாக உமது கருத்துக்களை முன்வைத்து 'சிறுவர் உரிமையை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் விளக்கக் கட்டுரை.

ஆ.இன்று நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வாகன சாரதிகளும் பாதசாரிகளும் வீதி விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். இவற்றை கருத்திற் கொண்டு நண்பர்கள் இருவருக்கிடையில் இடம்பெறும் உரையாடல்.

இ.முதியோர்கள் பலர் இன்று புறக்கணிக்கப்படுகின்றனர். இவர்களை இறுதிவரை பராமரிக்க வேண்டியது எமது கடமை மட்டுமல்ல பொறுப்பும் கூட என்ற கருத்துப்பட ஒரு மேடைப் பேச்சு.

ஈ.கமலன் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் அவனிடத்தில் ஊக்கமும் திறமையும் இருந்தமையால் அவன் பல இடங்களுக்குச் சென்று உழைத்து நிறைய பணம் ஈட்டி சந்தோசமாக வாழ்ந்தான். "திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்ற பழமொழிக்கு இணங்க சிறுகதை ஒன்று எழுதுக.

**03.கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் கருத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

திரு. ஞானசேகரனின் நெறியாள்கையில் உருவாகி வெளிவந்திருக்கும் 'பாரதி' தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல் என்று கருதலாம். வரலாற்றுப் புருஷர்களை திரைப்படம் மூலமாகப் பலர் நம்முன் நிலை நிறுத்தியுள்ளனர். ஔவையார், அம்பிகாபதி, கப்பலோட்டிய தமிழன் என்பன வெவ்வேறு கால கட்டங்களில் தோன்றி மக்களை பரவசப்படுத்தியுள்ளன. புலவர்களைப் பற்றியும் அறிஞர்களை பற்றியும் அரிய தகவல்கள் வழங்கின.

தொழில்நுட்பம் மின்னல் வேகத்தில் வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில் சென்ற நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்து மறைந்துபோன ஒரு கவிஞனை நவீன உத்திகளை கையாண்டு நம்முன் நிறுத்தி இருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. திரு. ஞானசேகரனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். பாரதி பற்றிய வரலாற்றுக் கதைகள் பலரும் அறிந்தவை, அவை பெருந்தொகையாக உள்ளன. இது அக் கவிஞனை பற்றிய படத்தை தயாரிப்பதிலும் பிரச்சனைகளை ஏற்படுத்திவிடுகின்றன. எதனை சேர்ப்பது, எதனை விடுவது? எந்த நிகழ்ச்சிகளைச் சேர்த்தால் தொய்வு ஏற்படும்? விறுவிறுப்பை தருவது எது? இவைகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து பாரதியின் இலட்சிய கனவின் சாரத்தை மக்களுக்கு வழங்க வேண்டும்.

**(04)பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

***இடர் வரும் போதும் - உள்ளம்***
***இரங்கிடும் போதும்***
***உடன் பிறந்தவர் போல் - மாந்தர்***
***உறவு கொள்வர் அப்பா***
***ஓடும் உதிரத்திலும் - வடிந்து***
***ஒழுகும் கண்ணீரிலும்***
***தேடிப் பார்த்தாலும் - சாதி***
***தெரிவ துண்டோ அப்பா!***

1.இக் கவிதையின் மையக் கருத்து யாது?
2.இக் கவிதையில் இடம்பெறும் அணி யாது?
3.இக் கவிதையை பாடிய கவிஞர் யார்?
4.இக் கவிதையில் மாந்தர் உறவு கொள்ளும் சந்தர்ப்பங்கள் எவை?



6.குப்பையில் கிடந்தாலும் ...................... மங்காது.
1.குன்றுமணி 2.குன்றிமணி 3.குந்துமணி 4.குண்டுமணி

7.தமிழ்த்தின விழா பற்றிய ........................ எல்லா பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டது.
1.அறிக்கை 2.கடிதம் 3.சுற்று நிருபம் 4.அறிவித்தல்

8.நீர்த் தொட்டியில் இருந்து நீர் ......................... என வெளியேறியது.
1.குபு குபு 2.சலசல 3.மளமள 4.குபீர்குபீர்

9.சிங்கம் கர்ச்சிக்கும் போல எருது .............................
1.கத்தும் 2.கதறும் 3.முக்காரம் போடும் 4.ஊளையிடும்

10.நீண்ட காலமாக குன்றுங் குழியுமாக இருந்த வீதிகள் ......................... செய்யப்பட்டன.
1.புனர்நிர்மானம் 2.புனருத்தாரணம் 3.புனரமைப்பு 4.சீரமைப்பு

11.ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் கூறும் புகழுரை.
1.மதிப்புரை 2.அணிந்துரை 3.பதிப்புரை 4.என்னுரை

12.எண்பதாவது ஆண்டு நிறைவின் முடிவில் கொண்டாடும் விழா.
1.பவள விழா 2.பொன்விழா 3.அமுதவிழா 4.வைரவிழா

13.பனையின் இளங்காய் நுங்கு போல பலாவின் இளங்காய்,
1.கச்சல் 2.குரும்பை 3.மூசு 4.காய்

14.அலுமாரி என்பது எந்நாட்டுத் திசைச்சொல்?
1.போர்த்துக்கீச 2.ஒல்லாந்த 3.ஆங்கிலேய 4.மராத்தி

15.பக்ஸ் (Fax) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம்.
1.இணையம் 2.தொலைநகல் 3.மின்னஞ்சல் 4.இணையத்தளம்

16.தோள் கொடுத்தல் என்ற மரபுத் தொடருக்கு ஒப்பான மற்றொரு மரபுத் தொடர்
1.சீட்டுக்கொடுத்தல் 2.கைகொடுத்தல் 3.முகங் கொடுத்தல் 4.தட்டிக் கொடுத்தல்

17.சாக்கு போக்குச் சொல்லுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்.
1.கவர்ச்சியாய் பேசுதல் 2.தட்டிக்கழித்தல் 3.அலட்சியமாக பேசுதல் 4.செவி மடுத்தல்

18.மிகுந்த வறுமையைப் புலப்படுத்தும் அருச் சொற்றொடர்.
1.உணர்வொழிகாலம் 2.நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
3.ஆடையின்றி வாடையின் மெலிந்து 4.ஏழை எளியவர் வாயில் அடித்து

19.பகைவரையும் பொறுக்கின்ற பண்பை விளக்கும் உவமைத் தொடர்.
1.ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் 2.அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்
3.நீறு பூத்த நெருப்புப் போல் 4.மத்திடைப்பட்ட தயிர் போல

20.நித்திய வேதனை எனும் பொருள் தரும் பழமொழி.
1.பழகப் பழக பாலும் புளிக்கும் 2.மௌனங் கலக நாசம்
3.மழைவிட்டும் தூவானம் போகவில்லை 4.வள்ளலிடமிருந்து பரிசு பெறுதல்

21.தாரணப் பெயர் அல்லாதது.
1.முள்ளி 2.விளக்கு 3.விலங்கு 4.[illegible]ற்றாடி

22.இடைப் பகாப்பதமாக வருவது.
1.மற்று 2.சால 3.மண் 4.ஒடு

23.'சி' என்ற விகுதி பெற்ற ஆக்கப் பெயர் அல்லாதது.
1.முயற்சி 2.வீழ்ச்சி 3.யோசி 4.ஆட்சி

24.இயல்பு புணர்ச்சி அல்லாதது
1.கடலலை 2.பூமகள் 3.பாற்சோறு 4.குடிலை

25.ஓயாது பெய்கின்றது என்பதில் ஓயாது என்பது
1.பெயரெச்சத்தொடர் 2.வினையெச்சத்தொடர் 3.வினையாலணையும் பெயர் 4.வினைமுற்று

26.சுடுகாடு என்பது இடுகாடு என அழைப்பது
1.இடக்கரடக்கல் 2.போலி 3.மரூஉ 4.மங்கலம்

27.செங்கோன்மை என்பது
1.பண்புத்தொகை 2.வினைத்தொகை 3.உவமைத்தொகை 4.அன்மொழித்தொகை

28.கடைப்போலியாக வருவது
1.ஔவை 2.பந்தல் 3.யானை 4.ஐந்து

29.படித்தனன் என்பதன் சரியான பகுப்பு
1.படி + த் + அன் + அன் 2.படி + த் + த + அன் + அன்
3.படி + த் + அன் 4.படி + த் + அன் + அன்

30.பின்வருவனவற்றுள் பிறவினையாக வரக்கூடியது
1.திருந்தினேன் 2.உண்டேன் 3.உருட்டினான் 4.சென்றேன்

31.மருந்தைக் குடித்தனாலன்றோ
1.நோய் குணப்படும் 2.நோய் குணப்படுவது 3.நோய் குணப்பட்டது 4.நோய் குணப்பட முடியும்

32.தகுந்த பருவம் வந்தால் அன்றிப்
1.பழங்கள் பழா 2.பழங்கள் பழுக்காது 3.பழங்கள் பழுக்கும் 4.பழங்கள் பழாது

33.பொய் பேசுதலும் புறங் கூறுதலும் நமது வாழ்க்கைக்கு
1.உகந்ததல்ல 2.உகந்தனவன்று 3.உகந்ததன்று 4.உகந்தனவல்ல

34.செல்லிடத் தொலைபேசியை அவன்
1.உபயோகிக்கத் தெரிந்தனன்று 2.உபயோகிக்கத் தெரிந்தவனல்லன்
3.பாவிக்கத் தெரிந்தவனல்லன் 4.பாவிக்கத் தெரிந்தவனல்ல

35.மனிதர்கள் தாம் தாம் செய்த கருமங்களின் பயனை
1.அவரவரே அனுபவிப்பர் 2.தாமே அனுபவிப்பர்
3.ஒவ்வொருவரும் அனுபவிப்பர் 4.அவரே அனுபவிப்பர்



36.கரகோஷத்தின் மத்தியில் நாடகக்குழு மேடையில்
1.தோன்றி[illegible] 2.தோன்றியது 3.தோன்றினர் 4.தோன்றினார்கள்

**பின்வருவனவற்றுள் பிழைகள் அற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.**

37.
1.திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறள்களும் ஆழமான கருத்துடையன
2.பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல பழக்கங்கள் அல்ல
3.இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் இயற்றினார்
4.வெள்ளம்போல மக்கள் திரண்டிருந்தனர்

38.
1.நீங்கள் பாடங்களைப் படித்து வாரும்
2.நானும் நீயும் சுற்றுலாவிற்குச் செல்வோம்
3.பறவைகள் மரத்திற்கு மரம் கூடு கட்டியது
4.மாணவர் வரிசை வரிசையாக சென்றனர்

39.
1.ஆயிரம் தாரகைகள் சேர்ந்தாலும் ஒரு சந்திரனுக்கு நிகராகுமா?
2.நீ சிந்தித்து செயற்பட்டிருந்தால் உனக்கு இத்துன்பம் நேர்ந்திருக்காது
3.மழை பெய்திருப்பின் குளம் நிறைந்திருக்கவில்லை
4.ஆண் மகனோ பெண் மகளோ அங்கே நிற்பவர்

40.வாக்கியத்தினை ஒழுங்குபடுத்தி எழுதுக.
அ)சுருங்கக் கூறின் உவமைகள் மனச் சித்திரங்களாக இருப்பன.
ஆ)உவமையை விட உருவகம் ஆழமானது, சிக்கலானது
இ)அது கவிஞனின் உள்ளுணர்வில் பிறப்பதாகையால் கற்பிக்க முடியாது என்றும் அவர் கூறினார்
ஈ)இது காரணமாகவே அரிஸ்டோட்டில் என்ற கிரேக்க தத்துவ ஞானி, கவிதையின் தலையாய அம்சம் உருவகம் என்றார்.
உ)உருவகமோ உணர்வுக் காட்சிகளாக அமைகிறது.
1.ஆ, ஈ, இ, அ, உ 2.உ, ஈ, இ, அ, உ 3.அ, ஈ, ஆ, இ, உ 4.உ, இ, ஈ, ஆ, அ

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012**
**தமிழ் மொழியும் இலக்கியமும் - II (மாதிரி வினாத்தாள்)**

**(இறுதிக்கட்ட எதிர்பார்ப்பு வினாக்களுடன்)** **நேரம்: 2 மணி**

**(01) சுருக்கமான விடை தருக.**

1.பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக. 'மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்'
2.'படி' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
3.இடக்கரடக்கல் என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் தருக.
4.வினைத்தொகை என்பதற்கு விளக்கம் கூறி உதாரணம் ஒன்று எழுதுக.
5.'உம்' என்ற இடைச்சொல் வர வாக்கியம் ஒன்று எழுதுக.
6.'மேசையின் கண் உள்ள புத்தகம்' என்பதை வேற்றுமை வகையை கூறி அதன் பொருள் தருக.
7.பந்தியமைக்கும்போது கவனிக்க வேண்டிய விடயம் இரண்டு கூறுக.
8.தற்சார்புக் கட்டுரை என்றால் என்ன?
9.சமூக அறிக்கை எழுதப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.
10.செவ்வி காண்பவருக்கு சிறந்த கேள்விகளைக் கேட்கும் திறன் அவசியம். காரணம் தருக.

சுற்றிக் காட்டி தீபாராதனை செய்வார்கள். இதனை வெறும் சடங்காக நினைக்கக் கூடாது. உலகின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் காட்டும் குறியீடாகக் கருதி வணங்க வேண்டும். அதனால் நமக்கு சுகபோகமும் ஞானமும் கிட்டும்.

**நீரில் மகாவிஷ்ணு**

ஸ்ரீமன் நாராயணன் கார்த்திகை மாதத்தில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீரிலும் ஆவிர்பவிக் கிறார். அப்போது செய்யப்படும் சாளக்ராம பூஜை ஆயிரம் மடங்கு பலன் தரும். பாவம், வறுமை போன்றவற்றைப் போக்கி வளமான வாழ்வு பெறலாம்.


**சோமவார விரதம்**

கார்த்திகை மாத திங்கட்கிழமையன்று உபவாசம் இருந்து சிவபெருமானைப் பூஜிப் பதை சோமவார விரதம் என்பர். இது அளவற்ற புண்ணியத்தைக் கொடுக்கும். அன்று இறைவனுக்குச் செய்யும் அபி'ேகம், அர்ச்சனைக்கு விசேஷ பலன் உண்டு.

**சங்காபிஷேகம்**

சித்தாந்த ரத்னாகரம் என்ற நூலில், கார்த்திகை மாத திங்கட்கிழமையன்று செய்யும் சங்காபிஷேகத்தைப் பற்றிய தகவல் உள்ளது. இறைவன் கார்த்திகையில் அக்கினிப் பிழம்பாக உள்ள தால், அவரைக் குளிர்விக்கும் பொருட்டு சங்காபிஷேகம் செய்கின்றனர். கார்த்திகை மாதம் சூரியன் பகைவீடான விருச்சிகத்தில் சஞ்சரிப்பதும், அதில் சந்திரன் நீசத்தில் இருப்பதும் தோஷமாகிறது. இந்த தோஷத்தை நிவர்த்தி செய்ய சங்காபிஷேகம் செய்கின்றனர்.
திருமழிசை குளிர்நாயகி சமேத ஒத்தாண் டேஸ்வரர் ஆலயத்தில் கார்த்திகை மாத திங்கட்கிழமையில் 108 சங்காபிஷேகம் செய்கின்றனர். மாலை லட்சதீபப் பெருவிழா வும், இரவு பஞ்சமூர்த்திகள் வீதியுலாவும் நடைபெறும்.

## கல்பாத்தி தேரோட்டம்





கேரள மாநிலம், பாலக்காடு நகரின் ஒரு பகுதிதான் கல்பாத்தி. காசியில் பாதி கல்பாத்தி என்பது இத்தலச் சிறப்பு.



**பரணி தீபம்**

திருக்கார்த்திகை நாளில் பெண்கள் தங்கள் வீட்டு முற்றத்தில் ஒரு தட்டில் பூ வைத்து, நடுவில் குத்து விளக்கேற்றி வைப்பர். அதன் அருகே பெரிய அகல் விளக்குகளை எரிய வைப்பர். இதுவே பரணி தீபம். தினமும் சுவாமி அறையில் தீபமேற்றி வழிபடுவர். மீதமான எண்ணெய், திரிகளை ஒரு பாத்திரத் தில் சேமிப்பர். தினமும் புதிய திரி, புதிய எண்ணெயில்தான் தீபமேற்றுவர். அந்த மிகுந்த எண்ணெய், திரிகளைக் கொண்டுதான் இந்த பரணி தீபத்தை ஏற்றுகின்றனர்.



ஸ்ரீவாஞ்சியம் கார்த்திகை நீராடல்

அத்திரி மகரிஷிக்கும் அனுசுயாவுக்கும் தத்தாத்ரேயர் மகனாகப் பிறக்க அருள் கிடைத்தது இத்தலத்தில்தான். எமதர்மனை வாகனமாகக் கொண்டு சிவபெருமான் எழுந்தருளிய தலம் இது. காசியில் இறந்தால் முக்தி கிடைக்கும் ஆனால் பைரவ தண்டனை உண்டு. வாஞ்சியத்தில் முக்தி கிடைக்கும் பைரவ தண்டனை இல்லை. இங்கு வழிபட்டால் பாவங்கள் குறைவதுடன் புண்ணியம் பெருகும் என்பர்.
இத்தலத்தில் இறப்போரின் காது மட்டும் (எந்த ஜீவன் ஆனாலும்) மேற்புறம் இருக்கும் படி கிடக்கும். அப்போது சிவபெருமான் அந்தக் காதில் பஞ்சாட்சர உபதேசம் செய்வார் எனக் கூறப்படுகிறது. அத்தகைய புண்ணியத் தலம் திருவாஞ்சியம்.
இவ்வாலயத்தில் உள்ள திருக்குளம் குப்த கங்கை, முனி தீர்த்தம் எனப்படுகிறது.
கங்கையானவள் 999 பாகம் ரகசியமாக இந்த குப்த கங்கையில் வசிக்கிறாள். மீதி ஒரு பாகம் தான் காசியில் உள்ள கங்கையில் உள்ளாள். எனவே, கங்கையின் சக்தி காசியைவிட இங்கு அதிகம் என்பர். இந்த குப்த கங்கையில் கார்த் திகை மாத ஞாயிற்றுக்கிழமைக-ளில் நீராடி, இறைவனை வழிபட்டால் பஞ்சமா பாதகங் களும் விலகும். கார்த்திகை ஞாயிறு இங்கு விசேஷம். இப்படி நீராடுவதை கார்த்திகை நீராடல் என்பர்.
கார்த்திகை நீராடல் உற்சவம்தான் இங்கு விசேஷம். அந்நாளில் அதிகாலை ஐந்து மணி முதல் ஆறு மணிக்குள் ஈசனும் தேவியும் அஸ்திர தேவரோடு பிரகார வலம் வந்து, குப்த கங்கையின் கிழக்குக் கரையில் ஆசி வழங்குவார்கள். இதை தரிசிப்பதே புண்ணியம்.
முதல் ஞாயிறு நீராடினால், பிரம்ம ஹத்தி தோஷம் விலகும். விஸ்வபத்ரனின் பிரம்மஹத்தி தோ'ம் இங்குதான் நீங்கியது. இரண்டாம் ஞாயிறு நீராடினால், கள் உண்டு மயங்கிய பாவம் விலகும். மூன்றாம் ஞாயிறு நீராடினால், திருட்டுத் தொழிலால் ஏற்பட்ட பாவம் நீங்கும். நான்காம் ஞாயிறு நீராடினால், மனசஞ்சலம், ஜென்ம பாவம் விலகும். ஐந்தாம் ஞாயிறு நீராடினால், சம்சர்க்க தோ'ம் விலகும். குடந்தை-நன்னிலம் வழியில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் இத்தலம் உள்ளது.
கார்த்திகை கடை ஞாயிறு விரிஞ்சிபுரம் தொண்டை நாட்டுத் திருத்தலம். விரிஞ்சிபுரம் மதிலழகு என்பர். மரகதாம்பிகை சமேத மார்க்கபந்தீஸ்வரர் இவ்வாலய சுயம்புலிங்கமாக உள்ளார்.
பிரம்மனின் பெயர் விரிஞ்ஞன். பிரம்மன் வழிபட்ட இத்தலத்திற்கு விரிஞ்சிபுரம் எனப் பெயர். திருவண்ணா மலையில் அடிமுடி காண திருமாலும் பிரம்மனும் முயன் றனர். தாழம்பூ வுடன் சேர்ந்து பிரம்மன் பொய் சொல்லி சாபம் பெற்றார். அந்தச் சாபம் நீங்க என்ன பிராயச்சித் தம் என ஈசனிடமே பிரம்மன் கேட்க, அதற்கு ஈசன் தேவரூபமாக காட்சி தராமல் உபாயம் செய்தார்.
விரிஞ்சிபுரம் தலத்தில் வசித்து சிவத்தொண்டு செய்யும் சிவநாதனுக்கும் நயனா நந்தினிக்கும் மகனாகப் பிறக்கும் படி செய்தார். பிரம்மன் சிறுவனாக இருந்தபோதே தந்தை இறந்து விட்டார். ஆலய தலைமை பூஜா உரி மையைப் பெற விரும்பிய தாயாதிகள் பூஜா உரிமை, வீடு, நிலம் யாவற்றையும் தங்களுக்கு எழுதித் தருமாறு சிறுவனை மிரட்டினர். இதனால் மனமுடைந்த சிறுவனின் தாய் ஈசனிடம் முறையிட்டு அழுதாள் பின் வீடு திரும்பி உறங்கினாள். அப்போது கனவில் ஈசன் தோன்றி, நாளை ஆலய பிரம்ம தீர்த்தத்தில் உன் மகனை நீராட்டிவை எனக் கூறி மறைந்தார். அன்று கடை ஞாயிற் றுக்கிழமைக்கு முதல் நாளான சனிக் கிழமை.
அவ்வாறே தாய் மகனை நீராட்டி குளக்கரையில் காத்திருந்த போது, ஈசன் கிழவர் வேடத்தில் வந்து சிறுவனை தன்னுடன் தீர்த்தத்தில் மூழ்க வைத்தார். ஒரு முகூர்த்த காலத்தில் அந்தச் சிறுவனுக்கு உபநயனம், பிரம்மோ பதேசம், சிவதீட்சை அனைத்தும் வழங்கி, பின் கரை ஏறிவந்து மகாலிங்கமாக மறைந்துவிட்டார். இதைக் கண்டு அனைவரும் வியந்தனர்.
அப்போது தேவர்கள் பூமாரி பெய்தனர். சுற்றுப்புற மன்னர்கள் (ஈசன் தங்களுக்கு கனவில் ஆணையிட்டபடி) பாலகனை யானைமீது ஏற்றி தீர்த்த திருமஞ்சன குடத்துடன்- மேளதாளத்துடன் ஊர்வலமாக ஆலயத்துக்கு அழைத்து வந்தனர். அப்போது ஆலயக் கதவுகள் தாமாகத் திறந்து கொண்டன.
சிறுவன் ஆகம விதிப்படி எல்லாம் அறிந்தவன்போல பூஜைகள் செய்தான். அபி'ேகம் செய்ய லிங்கத்தின் முடி எட்ட வில்லை. அதனால் ஈசன் திருமுடியை வளைத்து அபிஷேகத்தை ஏற்றுக்கொண்டார்.
அதேகோலத்தில் இப்போதும் முடிசாய்ந்த மகாலிங்கமாக இவ்வாலய இறைவனை நாம் காணலாம்.
திருவண்ணாமலையில் முடிகாண இயலாத பிரம்மன், இங்கே சிறுவனாகப் பிறந்தபோது இத்தலத்தில் இறைவனைப் பூஜித்து, அவரே முடி வளைந்து காட்சி கொடுத்த அதிசயத் தைக் காணலாம். அப்படி திருமுடி வளைந்த தினம்தான் கார்த்திகை மாத கடைஞாயிறு தினம்.
இதனை இவ்வாலயத்தில் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். இங்கு இன்னொரு சிறப்பும் நடைபெறுகிறது.
குழந்தை வரம் வேண்டுவோர் இங்குள்ள சிம்ம குளத்தில் நீராடி, ஈரத்துணியுடன் ஆலய வலம் வந்து பகவானை வணங் கினால் புத்திர பாக்கியம் கிட்டும். மேலும் பில்லி, சூன்யம் போன்ற வற்றால் பாதிக்கப்பட் டோரும் இப்படி நீராடி வழிபட்டால் இன்னல்கள் நீங்கப் பெறுவர்.

**தாய்லாந்தில் கார்த்திகை**

தமிழகத்தில் கார்த் திகை தீபம் கொண் டாடுவது போல அங்கும் இதை தேசிய விழாவாகக் கொண்டாட மன்னன் கட்டளையிட்டான். அதன்படி இப்போதும் நடக்கிறது. அந்த மன்னன் தமிழகப் பெண்ணை மணந்து கொண்டான். அவள் விருப்பப்படி இவ்விழாவை தாய்லாந் தில் கொண்டாடுகின்றனர்.

**சிகாகோவில் கார்த்திகை**

நவம்பர் மாத கடைசியில் இங்குள்ள மரங்கள் இலை களை உதிர்த்துவிடும். அப்போது மரங்களில் மின் விளக்குகளால் அலங்காரம் செய்து விழாவாக கொண்டா டுவர். இது கார்த்திகை தீபம் போன்றது.

# பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு 5 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

யுவதி ஒருவரை ஏமாற்றி பாலியல் வல்லுறவு புரிந்த ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் ஐவரும் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த யுவதி ஒருவரை ஏமாற்றி ஆலங்குளம் பகுதியிலுள்ள உல்லாச விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்துள்ளனர்.

மேற்படி யுவதியின் காதலன் எனக் கூறப்படும் இளைஞன் ஒருவர் தனது வீட்டில் விருந்துபசாரம்

ஒன்று நடைபெறுவதாகக் கூறி யுவதியை அழைத்துச் சென்று தனது நண்பர்கள் மற்றும் உல்லாச விடுதி முகாமையாளருடன் சேர்ந்து யுவதிக்கு பலவந்தமாக மது அருந்தக் கொடுத்து மேற்படி குற்றத்தை புரிந்துள்ளனர்.

இது தொடர்பாக செய்த முறைப்பாட்டை அடுத்தே அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் மேற்படி உத்தரவை வழங்கியுள்ளது.

# யுத்தத்தால் காயமடைந்த மாணவர்களுக்கு விசேட சிகிச்சை

யுத்த காலத்தில் படுகாயமடைந்து, உடலில் உலோகத்துண்டுகளுடன் பெறும் சிரமத்துடன் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட வைத்திய வசதிகளுடன் சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்தும் மாவட்டத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வதற்கான மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது மேற்படி விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுற்று மூன்றரை ஆண்டுகளாகியும் வன்னி மாணவர்களின் உடலில் உள்ள வெடி பொருட் சன்னங்களின் துகள்கள் அகற்றப்படாமல்

இருப்பதுடன் அவ்வாறு பாதிப்புற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கைகூட தெரியாமலிருக்கின்றது. இது தொடர்பில் விபரங்களைத் திரட்டி தன்னிடம் வழங்குமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கேட்டுக்கொண்டார் என அவர் தெரிவித்தார்.

# ஜெனீவா கூட்டத்தின் இறுதியில் இந்தியா மௌனம்

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பூகோள காலகிரம மீளாய்வுக் கூட்டத் தொடரின் கடைசி நாளான நேற்று முன்தினம் இலங்கைக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாதவகையில் இந்தியா செயற்பட்டது இலங்கை தொடர்பில் முன்னுக்குப் பின் முரணாக நடந்துகொள்ளும் நாடுகள் குறித்து அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் கடும் விசனத்தை வெளியிட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மீளாய்வுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடந்தபோது அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டிருந்த இந்தியா, இலங்கையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்த அமுலாக்கம், வடக்கு, கிழக்கின் இராணுவ முகாம்கள் அகற்றல் மற்றும் படைக்குறைப்பு, வடக்குத் தேர்தல் என்பன பற்றி காரசாரமாகக் கருத்து வெளியிட்டிருந்தது.

இலங்கை நிலைவரம் குறித்து ஆராய நியமிக்க ஐ.நாவால் நியமிக்கப்பட்டிருந்த குழுவில் ஸ்பெயின், பெனின் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் அங்கம் வகித்திருந்ததால் இந்தியாவின் அன்றைய கருத்து சர்வதேச மட்டத்திலும், மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியிலும் பேசப்பட்டது. ஆனால், நேற்றுமுன் தினம் இலங்கை தொடர்பில் நடைபெற்ற இறுதிக்கூட்டத்தில், இலங்கை தொடர்பில் ஏற்கனவே முன்வைத்த சிபாரிசுகளைப் பற்றி பொருட்படுத்தாமல் நேற்றுமுன்தினம் கூட்டத்தில் கலந்து கொண்டது, இது சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதற்கிடையில் நேற்றையக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் சில நாடுகள் முன்னுக்குபின் முரணாக நடந்துகொள்ளும் நாடுகள் குறித்து கடும் கவலை வெளியிட்டன.

இதேவேளை, நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்ததுடன் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சாதகமான பிரதிபலிப்பை இலங்கை அரசு இன்னும் இரு வாரத்துக்குள் அறிவிக்குமென்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், நடைபெற்ற பூகோள கால மீளாய்வு அமர்வில் இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய நாடுகள் இணைந்து தயாரித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள நூறு பரிந்துரைகளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இந்தப் பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை இலங்கை விவரித்துள்ளது. அதே வேளை, பூகோள கால மீளாய்வுக் கூட்டம் குறிப்பிட்டதொரு நாட்டை இலக்கு வைத்து செயற்படுவதாகவும், இந்த நடைமுறைகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பிளவை ஏற்படுத்த முனைவதாகவும் கியூபா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

# கடன் தொல்லையிலிருந்து... (தொடர்)

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். கடந்த 3 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் ஒருவர் கொழும்பு புறக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரே இவ்விதம் வாக்கு மூலம் அளித்தாரென்று புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரியந்த திக்கோவிட்ட தெரிவித்தார். கொலை செய்யப்பட்ட நபரும் சந்தேக நபரும் நெருங்கிய நண்பர்கள்.

கொலையுண்ட நபர் அடகுவைத்து மீட்கமுடியாமல் இருக்கும் நகைகளை மீட்டெடுத்து அதனை விற்பனை செய்து வருவதை தொழிலாகக் கொண்டிருந்தார். சம்பவ தினமான கடந்த 30 ஆம் திகதி தந்தேகநபர் ஒரு தொகை நகை இருப்பதாகவும் அதனை மீட்பதற்கு வருமாறும் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

நண்பனின் அழைப்பை ஏற்று 33 இலட்சம் ரூபாய் பணத்துடன் புறக்கோட்டைக்கு வந்த இந்திரேஸ்வரனை அவருடைய நண்பர் தனது காரில் கொட்டிகாவத்தை பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு அவரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார்.

இவ்வாறு கொலை செய்த பின்னர் சடலத்தை காரில் கொண்டு சென்று நானோயா பகுதியில் வீசிவிட்டு வந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபரின் கையடக்கத் தொலைபேசியில் பதிவாகியிருந்த தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பொலிஸாருக்கு கிடைத்த மேலும் பல தகவல்களின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கடந்த 04 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவரிடமிருந்து 23 இலட்சம் ரூபா பணத்தினையும் கொலை செய்யப்பட்டவரிடமிருந்து எடுக்கப்பட்ட நான்கு மோதிரங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேக நபர் 33 இலட்சத்தில் 10 இலட்சத்தை சிலருக்குக் கொடுக்க வேண்டிய கடனை அடைத்துள்ளதுடன் அடகுவைத்திருந்த மனைவியின் நகைகளையும் மீட்டுள்ளதாக சந்தேக நபர் வாக்குமூலம் அழித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கோயில் வாகனங்கள் திருட்டு

ஆனைக்கோட்டை புளியங்கிணற்றடி பிள்ளையார் ஆலயத்தில் இருந்த சுவாமி வாகனங்கள் இரண்டு திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறையிடப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் ஆலய வாகன சாலையில் வைக்கப்பட்டு இருந்ததாகவும், இதனை ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள் மிகவும் நூதமான முறையில் திருடிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஆலய வாகன சாலையில் வைக்கப்பட்டு இருந்த குதிரை வாகனம் மற்றும் இடப வாகனம் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

# அமைச்சர் ரிஷாத் தலைமையில் முல்லை மாவட்ட அபி.கூட்டம்

முல்லைத்தீவின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தற்போதைய திணைக்கள் நடவடிக்கைகள் குறித்து வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் வன்னி அபிவிருத்தி குழுத் தலைவருமான றிசாட் பதியுதீன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற முல்லை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது, கல்வி, சுகாதாரம், மின்சாரவசதி, சாலைவசதி, போக்குவரத்துப் பிரச்சினைகள், மீள்குடியேற்றம், மீன்பிடி, காணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது. முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்திற்கென்று தனியான கணக்காளர் இன்மையால் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டப்பணிகள் முடங்கியுள்ளதாக கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

தற்பொழுது துணுக்காயைச் சேர்ந்த கணக்காளர் தற்காலிகமாக கணக்காளர் பணியினை மேற்கொண்டுள்ளதாகவும் போக்குவரத்துப் பிரச்சினையால் இவரால் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதனால் இதன் காரணமாக அவருக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்து கொடுப்பதற்கும் நிரந்தர கணக்காளரை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

வைத்தியர்களைப் பொருத்தவரை தன்னால் ஒன்றும் செய்ய முடியாதுள்ளதாகவும் இதற்கு சுகாதார அமைச்சர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடமாகாண சுகாதாரச் செயலாளர் தெரிவித்தார். இதன்போது மேலும் பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டிருந்தது. மேலும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

# புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பாளர்களின் தேடல் 2012 : கண்காட்சி ஆரம்பம்

இளம் கண்டு பிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் "புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பாளர்களின் தேடல் -2012" எனும் தொனிப்பொருளிலான கண்காட்சியொன்று யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

எலோட் கணினி நிறுவனத்தில் ஏற்பாட்டில், நிறுவன இயக்குனர் பி.ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கண்காட்சியினை ஆரம்பித்து வைத்தார்.

இக்கண்காட்சியில், மாவட்டத்தில் இருந்து 25 பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். இதன்போது, இம்மாணவர்களது புதிய கண்டுபிடிப்புகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

விண்வெளி ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் விண்வெளிக் கலம், மிதிவெடி அகற்றும் புதிய கருவிகள், உட்பட பல்வேறு புதிய கருவிகள் இதன்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், தனியார் நிறுவனங்களின் புதிய கண்டு பிடிப்புக்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

இக்கண்காட்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளதுடன், கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புதிய கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பை மேற்கொண்ட மாணவனுக்கு பணப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக எலோட் நிறுவன இயக்குனர் தெரிவித்தார்.

# குழந்தைகள் காப்பகத்தில் கலை விழா

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் இணைந்து நடாத்தும் மழலைகளின் மாபெரும் கலை விழா நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை 10ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறவிருக்கிறது.

சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தின் பணிப்பாளரும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதியுமான பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டப ஸ்தாபகரும், தொழிலதிபருமான நடராசா சத்தியரூபன் திருமதி விஜயகுமாரி சத்தியரூபன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ்ப்பாணம் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகப் பணிப்பாளரும், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியருமான மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் திருமதி அனுசூயா - அருளானந்தன், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

கலைவிழா சிறப்பு அம்சமாக குழந்தைகள் காப்பக மழலைகள் வழங்கும் நிகழ்ச்சிகளும், தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (க)

# சிற்பியின் சிந்தனையில் பெண்ணியம் - சு. திருவரசன்



பெண், பெண்மை, பெண்ணியம் இவற்றுள் முதற் சொல் உயர்திணை உயிர்ப்பொருள். இரண்டாம் சொல் பெண்ணிற்குரிய இயல்புகளைக் குறிக்கும். மூன்றாம் சொல்லுக்கு, பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது என்று ஆங்கில ஆக்ஸ்போர்டு அகராதி விளக்கம் தரும்.பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று சார்லட்பன்ச் கருதுகின்றார். இந்திய அளவில் பெண்ணிய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்களாய் ராஜாராம் மோகன்ராய், காந்திஜி போன்றோரைச் சுட்டலாம். தமிழக அளவில் ஈ.வெ.ரா., பாரதியார், பாரதிதாசன், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி போன்றோரைக் குறிப்பிடலாம். இக்கட்டுரை, பெண்ணியத்திற்கு எவ்வெவ்வகையில் சிக்கல்கள் உள்ளன. எவரால் உள்ளன என்ற கருத்துகளைச் சிற்பியின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு அவருடைய பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்கின்றது.

**சிற்பிபெண்ணியம்:**

திருவள்ளுவர் முதல் பாரதி வரையிலான கண்ணதாசன் உள்ளிட்ட ஆண் கவிஞர்கள் பெண்ணியச் சிந்தனைகளைத் தத்தம் நோக்கில், தத்தம் காலத்திற்கேற்பப் பாடுபொருளாய்க் கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளனர். இவ்வகையில் தற்கால வாழும் கவிஞர்களுள் சிற்பியும் தம் சிந்தனைகளைப் பெண்ணியம் நோக்கிச் சிறப்பாகவே செலுத்தியுள்ளார். இவருடைய பெண்ணியச் சிந்தனைகளை,

1.இலக்கியப் பெண்ணியம்
2.நடப்பியல் பெண்ணியம்

என்ற பொதுத் தலைப்பில் பல்வேறு உட்தலைப்புகளோடு ஆராயலாம்.



**இலக்கியப் பெண்ணியம்:**

பெண்கள், கற்பு நிலையில் இன்று மட்டுமல்ல. அன்றும் துன்பப்பட்டிருந்தார்கள் என்பதை அன்றைய இலக்கியப் பெண்களான சீதை, அகலிகை, சகுந்தலை, மேனகை ஆகியோர் மூலம் சிற்பி பாடுகின்றார்.



காப்பிய நாயகனான இராமனுக்கு இருநோக்கு. முனிவர் மனைவி மீது அனுதாபம் தன் மனைவி மீது சந்தேகம் தீர தீக்குளிப்பு. (சி.க.வா. இராமன் பார்வையில் அகலிகை)

என்று இராமன் சீதை மீதுள்ள சந்தேகத்தையும், அகலிகை மீதுள்ள அனுதாபத்தையும் வெளிப்படுத்தியதைப் புலப்படுத்துகின்றார்.

**அறியாமல் அகலிகை செய்த**
**செயலிற்கு முனிவர்**
**கௌசிகன் கொடுத்த சாபம்**
**கல்லாகக் கடவது**
**சாப விமோசனம்**

இராமனின் காலடி ஏகுதல். (சி.க.வா. அகலிகை இன்னும் காத்திருக்கிறாள்) என்ற சிற்பியின் வரிகளை, அப்துல் ரகுமானின்,

**இந்திரனாகி உன்னைக்**
**கற்பழிப்பவர்களும் நாம்தாம்**
**கௌதமனாகி உன்னைச்**
**சபிப்பவர்களும் நாம்தாம்**

என்ற வரிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆண்களால் பெண்ணுக்குண்டான சோதனைகளை உணரலாம். இதுபோல, ஆண்களால் பெண்களுக்குண்டான நிகழ்வுகளை, சிற்பி தம் பெண்ணியச் சிந்தனைகளைப் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்.

துஷ்யந்தனிடம் தன்னை இழந்த
**சகுந்தலை தன்னை யார்**
**என்பதனை நிலைநாட்டிக்**
**கொள்ள முடியாமல்**
**தவிப்பது தொலைத்துவிட்ட**
**மோதிரத்திற்காக**
(சி.க.வா. ஓ, சகுந்தலா)

இல்லற ஆண்கள் மட்டுமின்றி, முனிவர்கள் கூடப் பெண்ணைக் கருதிய நிலையை, விசுவாமித்திர முனிவர் மேனகையுடன் உல்லாசம் கொண்டு சிறிதுநாள் கழித்து பிரிந்து மீண்டும் தவத்திற்கே சென்று விடுகின்றார்.

**நடப்பியல் பெண்ணியம்:**

இக்கால நடப்பியற் கூறுகளை அரசியல், கலாச்சாரம், பண்பாடு, சமயம், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய நிலைகளில் பெண்ணியச் சிந்தனைகளைச் சிற்பி தம் கவிதைகள் மூலம் காட்டுகின்றார்.

**அரசியல் பெண்ணியம்:**

சொல்லாலும் செயலாலும் சில போலி அரசியல்வாதிகள் வேறுபட்டிருப்பர். இத்தகையோருள் ஒருவர் பகலெல்லாம் பெண்ணிடம் களித்திருந்து மாலையில் வேடமிடும் விதத்தை.

**இன்றுமாலை ஐந்து மணிக்கு**
**அநாதை, விடுதி திறப்புவிழா**
**திறப்பாளர் மாண்புமிகு**
**சிநேகலதா குலுங்கக்**
**குலுங்கச் சிரித்துக்**
**கொண்டிருக்கிறாள்**
(சி.க.வா., சர்ப்பயாகம்,
தரிசனங்கள்) என்று கூறுகிறார்.

**சமயப் பெண்ணியம்:**

சமயப்பணியில் புனிதப் பணியாகக் கருதப்படும் கோவில் தருமகர்த்தாக்கள். கோவிலுக்கு அருகிலுள்ள சத்திரத்தில் கோவில் புனிதத்தோடு சேர்த்துப் பெண்ணின் புனிதத்தையும் கெடுப்பதை,

**தருமகர்த்தா நச்சரிப்பின்**
**கசங்குகின்ற பருவத்தின்**
**உம்ம்ம் மெலிந்த உம்ம்ம்**
(சி.க.வா, தரிசனங்கள், ப.301)

என்று பாடுவதால் அறியலாம்.

**பொருளாதாரப் பெண்ணியம்:**

வரதட்சணைக் காரணமாகப் பெண்ணினம் பாதிப்படைவதையும், அதற்கு மாமியார் என்னும் பெண்ணே சில இடங்களில் காரணமாகிறாள் என்பதையும்,

**அப்பா கேட்கிறார் நோட்டு**
**அச்சிடும் யந்திரம்**
**அம்மா கேட்கிறாள் கோலார்**
**சுரங்கம்** (சி.க.வா, தண்டனை, ப.540)

என்ற வரிகளால் அறியலாம்.

**சமுதாயப் பெண்ணியம்:**

இன்றைய சமுதாயத்திலும் பெண்கள் மலர்கள்தாம் மணம் வீசுபவர்கள்தாம் பிறரால் நுகரப் படுபவர்கள்தாம் மலரால் மலருக்கு - பெண்ணுக்கு எப்பயனும் இல்லைதான் இத்தகைய மலரைக் கசக்கி நுகர்பவர்கள் ஆண்கள் தான். இவ்வுண்மைகளை,

**பெண்கள் இன்னும் மலர்**
**கொய்யும் பூந்தோட்டம்தான்:**
**ஆண்கள் மட்டும் சதை**
**கிழிக்கும் முள்ளின் வேலி**
(சி.க.வா. இராமன் பார்வையில் அகலிகை, ப.529)

என்று சித்தரிக்கிறார்

**புரட்சிப் பெண்ணியம்:**

விதவைப் பெண்களின் வாழ்வில் விடிவு ஏற்படல் வேண்டும் சோகத்திற்கு முடிவு ஏற்படல் வேண்டும் அதாவது அத்தகைய பெண்களை மணக்க ஆண்கள் முன்வரவேண்டும். இக்கருத்துக்களை,

**அது சந்தை, அவளோ**
**மங்கலம் இழந்த மங்கை**
**சந்தை, வாரம் ஒருமுறை**
**கூடும், அவளுக்கு நேரம்**
**எப்போது மாறும்**
(சி.க.வா.விடிவு ப. 242)

என்று படம்பிடிக்கின்றார்.

**முடிவுகள்:**


சிற்பி தம் பெண்ணியக் கருத்துக்களை இலக்கியப் பெண்ணியம், நடப்பியல் பெண்ணியம் என்ற இருபெருந்தலைப்புகளில் வகைப்படுத்துகின்றார்.

இலக்கியத்தின் மூலம் பெண்ணியக் கருத்துக்களைப் புலப்படுத்த சீதை, அகலிகை, சகுந்தலை, மேனகை போன்ற பெண் பாத்திரங்களையும், இராமன், கௌசிகன், துஷ்யந்தன், விசுவாமித்திரர் போன்ற ஆண் பாத்திரங்களையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். நடப்பியலின் மூலம் பெண்ணியக் கருத்துகளைப் புலப்படுத்த அரசியல், சமயம், பொருளாதாரம், சமுதாயம், புரட்சி, போலித்தனம் போன்ற பாடு களங்களை உருவாக்கிக் கொண்டுள்ளார்.

இலக்கியப் பெண்ணியத்தில் சந்தேகம், கோபம், தவிப்பு, அனுதாபம், ஆகிய உணர்வுகள் பிரதிபலிக்கின்றன.

நடப்பியல் பெண்ணியத்தில் காமம், சலனம், மேல்நாட்டுப் பற்று, பொருட்பற்று, வறுமை, பகல்வேடம், போலித்தனம், விதவைமணம், இயலாமை போல்வன மையக் காரணங்களாய் அமைகின்றன.

நன்றி: ஆய்வுக்கோவை





## சுமப்பவள்

நான் உறவாட தொப்புள்கொடியானவள்
நான் உறங்க மடியானவள்
நான் உண்ண நிலாவை உலாக்காட்டியவள்
நான் பத்து மாதம் தங்க
பயங்கர பாதுகாப்புத் தந்தவள்
நான் அழுத போது
தான் அழுதவள்
நான் சிரித்தபோது
தான் சிரித்தவள்
நான் நோயுற்று வீழ்ந்த போது
என்ன ஆயிற்று என்று துடிதுடித்தவள்
மழையில் நனைந்தால் வருத்தம் வரும் என்று
சிறு முளையிலேயே சொல்லி பள்ளி அனுப்பியவள்
கண்விழித்து என்னைக் காவல் செய்தவள்- என்
முகம் வாடியிருந்தால்- தன்
அகம் வாடச் செய்தவள்
ஊட்டிய சோற்றில் என்
எச்சில் விழுந்தபோதும்
மருந்தாய் என் மிச்சத்தை எடுத்து உண்பவள்
காரியங்கள் அத்தனையையும்
காலத்திற்கு ஏற்றவாறு
கடகட என்று செய்பவள்
காப்பவளே! காப்பவளே!
காலமெல்லாம் சுமப்பவளே!
கண்கண்ட தெய்வங்களே!


- ஜெயம் ஜெகன்

தங்களுக்குத்தான் ஏதாவது விஷேடமாகத் தயாராகிறதோ என்று ஆச்சரியப்பட்டு, ஆசையுடன் காத்திருந்தார்கள். ஆனால் அவற்றிற்கென்று விஷேசமாக ஒன்றும்கொடுக்கப்படவில்லை. அடுத்த ஞாயிறன்று கொட்டகையில் மிருகங்கள் கூடியபோது, இனிமேல் பன்றிகளுக்கு மட்டும் தினந்தோறும் பார்லி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. வேறு எந்த விலங்கும் பார்லி உபயோகிக்கக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டது. பழத் தோட்டத்துக்கு அப்பாலிருந்த வயலில் இனி பார்லியைத் தவிர வேறு எதுவும் பயிரிடக்கூடாது. அத்துடனில்லாமல் தினமும் பன்றிகளுக்கு ஒரு கோப்பை பீர் தரப்படுவதாக ஒரு செய்தியும் விலங்குப் பண்ணையிலே பரவியது.

நெப்போலியனுக்கு மட்டும் தினமும் அரை லீட்டர் பார்லி நீர் கொடுக்கப்பட்டது என்றும் தெரிய வந்தது. அந்த பீரை நெப்போலியன் தினமும் பீங்கான் பாத்திரத்தில்தான் சாப்பிட்டு வந்தது என்றும் தெரியவந்தது. மிகமிகக் கடினமான வேலைகள் இருந்தன. எனினும், இப்போது விலங்குகள்




வாழ்க்கையிலே ஒரு புது கௌரவமும், பெருமையும் பெற்றிருந்தன என்பதால் வாழ்க்கை சந்தோசமாகவே இருந்தது. எப்போதும் இல்லாத ஒரு புது மேன்மை உணர்ச்சியுடன் மிருகங்கள் வாழ்ந்தன.


பாட்டுக் கச்சேரிகள், பிரசங்கங்கள், ஊர்வலங்கள் எல்லாம் இப்போது அதிகமாக இருந்தன. வாரத்தில் ஒருநாள் மிருகங்கள் தாமாகக் கூடி கொண்டாட்டங்கள் நடத்த வேண்டும் என்று நெப்போலியன் உத்தரவிட்டிருந்தது.

இப்படிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாதவர்களுக்குப் பன்றிகள் கொடுமையான தண்டனைகள் விதித்தன. விலங்குப் பண்ணையின் சாதனைகளைப் பற்றிப் பாராட்டுவ தற்காகவே இந்தக் கூட்டங்கள் கூடின. குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மிருகங்கள் எல்லாம் தங்கள் தங்கள் அலுவல்களை அப்படியே விட்டு விட்டு வந்து ஒன்றுகூடி இராணுவ அணிவகுப்பு முறையில், வரிசையாகப் பண்ணையைச் சுற்றிச் சுற்றி வரவேண்டும்.

பன்றிகள் முதலில் போகும். பிறகு குதிரைகள், பசுக்கள், அடுத்து ஆடுகள், அதறகப் பால் கோழிகளும் வாத்துகளும் இருமருங்கிலும் வேட்டை நாய்கள் உடன்வரும். எல்லாவற்றிற்கும் தலைமை வகித்து கட்டியம் கூறிக்கொண்டு, நெப்போலியனின் கறுப்புச் சேவல் செல்லும். பாக்ஸரும் க்ளோவரும் பெரிய பேனா ஒன்றை உயர்த்தித் தூக்கிச் செல்லும். அந்த பேனா துணியில் அழகாகக் குளம்பும் கொம்பும் பொறித்திருக்கும். அதன் கீழ் ஷதோழர் நெப்போலியன் வாழ்க! என்று எழுதியிருக்கும். ஊர்வலக் கொண்டாட்டத்திற்கும் பிறகு நெப்போலியனைப் போற்றிப் புகழ்ந்து பாட்டுக்கள் படிக்கப்படும். வழக்கமாக ஸ்க்வீலர் பன்றி விலங்குப் பண்ணையில் உணவு நிலை இப்போது எப்படி உயர்ந்து நன்றாக இருக்கிறது என்று ஏராளமான புள்ளிவிபரங்களுடன் ஒரு பிரசங்கம் நிகழ்த்தும். புதிதாக இந்தப் பருவத்தில் உணவு உற்பத்தி எவ்வளவு சதவிகிதம் பெருகியிருக்கிறது என்பதை அது எடுத்துச் சொல்லும்.


**(நாளை)**

## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

### உடல் உறுதி



உடலில் உறுதி உடையவரே
உடலில் உறுதி உடையவரே
உலகில் இன்பம்
உடையவராம்
இடமும் பொருளும்
நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம்
பேணுவையேல்,
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கு வருவோரின்
காலைத்தொட்டுத் கும்பிட்டுக்
காலன் ஓடி போவானே!

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழை யேநீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!

தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடும்பபா
நூறு வயது தருமப்பா!

- **கவிமணி**
**தேசிக விநாயகம் பிள்ளை**

சுடோக்கு எண் 89 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 1 | | | 5 | | | 8 |
| | 2 | | | | | | 5 | |
| | 3 | | | 7 | 4 | | | |
| | | 4 | 7 | | | 3 | | |
| | 5 | | | | | | 2 | |
| | | 3 | | | 1 | 9 | | |
| | | | 1 | 6 | | | 7 | |
| | 9 | | | | | | 8 | |
| 4 | | | 8 | | | 5 | | 2 |

சுடோக்கு எண் 90

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 2 | 4 | 9 | 7 | 8 | 5 |
| 8 | 9 | 4 | 3 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 7 | 2 | 5 | 1 | 6 | 8 | 4 | 3 | 9 |
| 9 | 8 | 2 | 7 | 5 | 4 | 3 | 6 | 1 |
| 4 | 1 | 7 | 9 | 3 | 6 | 5 | 2 | 8 |
| 5 | 3 | 6 | 8 | 2 | 1 | 9 | 4 | 7 |
| 1 | 4 | 8 | 5 | 9 | 3 | 2 | 7 | 6 |
| 6 | 7 | 9 | 4 | 1 | 2 | 8 | 5 | 3 |
| 2 | 5 | 3 | 6 | 8 | 7 | 1 | 9 | 4 |

### தகவல்கள்

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு **நோர்வே.**

உலகின் கூரை **திபெத்.**

உலகின் மிகப் பெரிய தீவு **கிரீன்லாந்து.**

மகிழ்ச்சியின் சர்வதேச அடையாள பறவை **புளூபேர்ட்.**

டகா என்பது வங்கதேசத்தின் **கரன்சி.**

தேசிய இளைஞர் நாள் **ஜனவரி 12.**

## ஜாக்கிசான் உருவானான்!



**ஹொ**ங்ஹொங்கில் 1954 ஏப்ரல் மாதம் 7ஆம் திகதியன்று ஓர் ஆண் குழந்தை கொழுகொழு என்று பிறந்தது.

குழந்தையின் தந்தை சார்லஸ் சான் ஒரு சமையல்காரர். தாய் லீ-லீ வீட்டு வேலை செய்யும் பெண். பிரசவம் பார்த்த டாக்டர், அந்தக் குடும்பத்தின் நிலைமையையும் குழந்தையின் அழகையும் பார்த்து, தானே தத்தெடுத்து வளர்க்க ஆசைப்பட்டார். ஆனால், ஏழைப் பெற்றோர் மறுத்துவிட்டனர்.

அந்தக் குழந்தைக்கு சான் காங்-காங் என்று பெயர் வைத்தனர். அதற்கு ஹாங்காங்கில் பிறந்தவன் என்று அர்த்தம். இந்த நிலையில் பெற்றோருக்கு ஆஸ்திரேலியாவில் வேலை கிடைத்தது. சாசனா என்ற நாடகப் பள்ளியில் காங்-காங் சேர்ந்தான். தனது ஏழாவது வயதிலேயே கராத்தே, குங்ஃபூ என மார்ஷியல் கலைகள் அனைத்தும் கற்றான்.

அவன் தினமும் 18 மணி நேரம் பயிற்சி எடுத்தான். எட்டு வயதில் “பிக் அண்ட் லிட்டில் வாங்ஷன்“ என்ற படத்தில் முதன்முதலாக நடித்தான். அவனுடைய 18ஆவது வயதில் புரூஸ் லீ நடித்த “என்டர் தி டிராகன்“ படத்தில் ஒரு சிறு வேடம் கிடைத்தது.

உயரமான இடத்தில் இருந்து குதிக்கும் காட்சியில் மற்ற ஸ்டன்ட் நடிகர்கள் தயக்கம் காட்ட, காங்-காங் உடனே ஓடி வந்து குதித்து புரூஸ் லீயைக் கவர்ந்தான். அதன் பின் வாய்ப்புகள் கிடைக்காததால், கட்டட வேலைகளில் உதவியாளராகக் கூலி வேலை செய்தார்.

தினக் கூலியாக வேலைபார்த்தாலும், இவரது துறுதுறுப்பையும், துள்ளலையும், உருவத்தையும் பார்த்து சக தொழிலாளர் ஒருவர் “லிட்டில் ஜாக்“ என்று அழைத்தார். இதுவே பின்னர் “ஜாக்கி“ ஆனது. ஹாங்காங்கில் இருந்து ஒரு தந்தி வர, ஜாக்கி சான் என்ற புதிய பெயருடன் புறப்பட்ட இவர், “ஃபிஸ்ட் ஆஃப் ஃப்யூரி“ என்ற படத்தில் நடித்தார். அப்போது அவருக்கு வயது 21.

அன்று முதல் அவரது வெற்றிப் பயணம் தொடர்ந்தது.

அந்த “கூலித் தொழிலாளி“தான் ஜாக்கிசான்.

## அறிந்து கொள்வோம்.... அமெரிக்கா

- அமெரிக்க தேசிய கொடிக்கு ஸ்டார்ஸ் அண்ட் ஸ்டைரப்ஸ், ஓல்ட், குளோரி, தி ஸ்டார் ஸ்பாங்க்ல்ட் பேனர் என்ற பெயர்களும் உண்டு.
- அமெரிக்க தேசிய கொடியில் மூன்று வண்ணங்கள் உள்ளன. அவை, வெள்ளை, சிகப்பு, ஊதா.
- வெள்ளை, சிவப்பு நிறத்தில் 13 நீள கோடுகள் இடம் பெற்றுள்ளது. பிரிட்டனிடம் இருந்து போராடிய 13 காலனிகள் இணைந்து அமெரிக்கா என உருவானதை அந்தக் கோடுகள் சுட்டிக் காட்டுகின்றன.
- 50 வெள்ளை நிற நட்சத்திரங்கள், 50 மாகாணங்களை நினைவுபடுத்துகின்றன.
- தலைநகரம். வாஷிங்டன் டி.சி. ( டிஸ்ட்ரிக்ட் ஆப் கொலம்பியா ).
- பெரிய நகரம் நியூயார்க்.
- பார்லிமென்ட் ( காங்கிரஸ் ): செனட் சபை ( 100 உறுப்பினர்கள் ). பிரதிநிதிகள் சபை ( 435 உறுப்பினர்கள் ).
- அதிபர் வசிக்கும் இடம்: வெள்ளை மாளிகை.
- மோட்டோ: இன் காட் வி டிரஸ்ட்.
- பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் அடைந்தது: 1776, ஜூலை 4. அங்கீகாரம், 1783 செப்டம்பர் 3.

# கௌரவக் கொலைகள்!

பதினைந்து வயதான அந்தப் பாகிஸ்தானிச் சிறுமியின் பெயர் அன்வு ஷா. பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவள் அவள். முஸாபராபாத் என்பது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரிலுள்ள ஒரு மாவட்டத்தின் தலைநகரம். இங்கிருந்து வடக்காக 87மைல்கள் அப்பால் அமைந்திருக்கிறது கோய் ரட்டா மாவட்டம். ஒரு பின்தங்கிய மாவட்டம். இங்குதான் அன்வு ஷா என்ற அந்தச் சிறுமி வசித்து வந்தாள். அவளது தந்தையும், தாயும் சேர்ந்து அவளது உடலெங்கும் அசிட்டை ஊற்றி அவளைக் கொன்றார்கள். கடந்த 31ஆம் திகதி கொன்லி என்ற இடத்திலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் அவள் மரணமானாள். அசிட் உடலெங்கும் வீசப்பட்டதால் எழுபது சதவீத எரிகாயங்கள் அவளது உடலில் காணப்பட்டதாக அவளுக்குச் சிகிச்சையளித்த டாக்டர் முஹமத் ஜகாங்கிர் கூறினார்.

ஓர் இளைஞனுடன் அவள் பேசிக் கொண்டிருந்ததை அவளது தந்தை முஹமத் ஷபார் கண்டு விட்டார். குடும்ப மானம் கப்பலேறி விட்டதாக நினைத்து ஆத்திரமுற்ற ஷபார் அவளை அடிஅடியென்று அடித்தார். ஏற்கனவே அவள் மீது சந்தேகம் கொண்டிருந்தார் தந்தை முஹமத் ஷபார். விளைவு தாயின் உதவியோடு மகளின் உடலெங்கும் அசிட்டை வீசினார் தந்தை. மகளின் கள்ளத் தொடர்பால் ஆத்திரமுற்ற தாங்கள் மகளைக் கொன்று விட்டதாகப் பெற்றோர்கள் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

கடந்த வருடம் பாகிஸ்தானில் கிட்டத்தட்ட ஆயிரம் பெண்களும், சிறுமிகளும் கௌரவத்தின் பேரால் படுகொலை செய்யப்பட்டனரென்று பாகிஸ்தானிய மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது. அதாவது 2011ஆம் ஆண்டு ஆகக்குறைந்தது 943 பெண்களாவது குடும்ப கௌரவத்தைக் கெடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொல்லப்பட்டனரென்று பாகிஸ்தானின் மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது.

பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கணித்து, கிராமிய நீதிக்கு உட்படுத்திக் கணவன்மார், தந்தைமார் மற்றும் சகோதரர்களே இந்தப் படுகொலைகளைப் புரிகின்றனர்.

தனது குடும்பத்தையோ அல்லது தனது பழங்குடியினரையோ அவமானத்துக்கு உள்ளாக்கியவள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களைக் கொலை செய்வதையே 'கௌரவக் கொலை' என்று கூறப்படுகிறது. வழமையாக ஆண் பாதுகாவலர்களால் அல்லது பழங்குடித் தலைவர்களால் பெண்கள் கொல்லப்படுவதுண்டு. சிலவேளைகளில் இவ்வாறான கொலைகளுக்குத் தாய்மார்களும் சகோதரிகளும் பொறுப்பாகவும் இருப்பதுண்டு. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உண்மைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. குற்றச்சாட்டு மட்டுமே அவள் அவமானத்தை ஏற்படுத்தியவள் என்பதற்குப் போதுமானது. எனவே அந்தக் கொலை இவ்வாறு நியாயப்படுத்தப்பட்டு விடும். பிரிட்டனுக்கு வெளியே பங்களாதேஷ், பிரேசில், ஈக்குவடோர், எகிப்து, ஜெர்மன், இந்தியா, ஈரான், ஈராக், இத்தாலி, ஜோர்டான், மொரோக்கோ, பாகிஸ்தான், பாலஸ்தீனம், சுவீடன், துருக்கி, உகண்டா ஆகிய நாடுகளிலும் கௌரவக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

குடும்பத்தின் அவமானத்தைப் போக்குவதற்காக வருடாந்தம் சுமார் ஐயாயிரம் பெண்கள் கொல்லப்படுகின்றார்கள் என்று ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் கூறுகிறது. பிரிட்டனில் ஒவ்வொரு வருடமும் இவ்வாறான பன்னிரண்டு படுகொலைகள் இடம்பெறுகின்றன என்று பொலிசார் தெரிவிக்கின்றனர். பிரிட்டனிலுள்ள ஆசிய நாட்டவர்களில் பத்துப் பேருக்கு ஒருவர் என்ற

அ.அருண்

விகிதத்தில் கௌரவக் கொலைகளை நியாயப்படுத்தலாமென நம்புகின்றார்கள். பி.பி.ஸி.நடத்திய ஆய்வொன்றில் இந்த விவரம் தெரிய வந்தது. பாகிஸ்தானில் கௌவக் கொலைகள் இடம்பெறுவது சகஜமானது. 2000ஆம் ஆண்லிருந்து 2004 ஆம் ஆண்டு வரை அங்கு இவ்வாறான சுமார் 4000 படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் பெண்களே கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர். ஜோர்டானில் 15 இலிருந்து 20 பெண்கள் வரை வருடாந்தம் கௌரவக் கொலைக்கு இலக்காகின்றனர் என்று அங்குள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த வருடம் இது வரை ஆகக்குறைந்தது எட்டு கௌரவக் கொலைகளாவது அங்கு இடம்பெற்றிருக்கின்றன. கடந்த வருடம் இவ்வாறு 17 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். கௌரவத்தின் பேரால் கொல்லப்பட்ட பெண்களில் 95 சதவீதமானவர்கள் பின்னர் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்களென்று தெரிய வந்ததாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டறிந்துள்ளது. அல்-ஜசீரா தொலைக்காட்சியில் ரிஸ் கான் என்பவர் கௌரவக் கொலைகள் தொடர்பாக நிகழ்ச்சியொன்றினை நடத்தியிருந்தார். பாகிஸ்தானில் 2006 ஆம் ஆண்டு 565 பெண்கள் கௌரவக் கொலைக்கு இலக்காக்கப்பட்டார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார். ஜோர்டானில் வருடாந்தம் 25இலிருந்து 30 வரையான பெண்களும், சிரியாவில் இருநூறிலிருந்து முந்நூறு வரையான பெண்களும் கொல்லப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இவை அனைத்துமே கௌரவத்தின் பேரால் செய்யப்படும் படுகொலைகளாகும்.

எனினும் இவற்றை விடக் கூடுதலான கௌரவப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. ஊடகங்களில் தெரிவிக்கப்படும் செய்திகளில் உண்மைக்குப் புறம்பானவையும் இருப்பதால், தெரிவிக்கப்பட்ட கௌரவக் கொலைளின் எண்ணிக்கை அச்சொட்டாகச் சரியானதல்ல.

உலகெங்கும் பல்வேறு காரணங்களுக்காகக் கௌரவக் கொலைகள் புரியப்படுகின்றன. திருமண பந்தத்துக்கு வெளியே கள்ள உறவு வைத்துக் கொள்ளுதல், திருமணத்துக்கு முன்னர் பாலுறவில் ஈடுபடுதல், தகாத நடத்தை ஆகிய குற்றங்களுக்காகக் கௌரவக் கொலைகள் செய்யப்படுகின்றன. நேரத்துக்குச் சாப்பாடு கொடுக்காததற்கும் கூடக் கௌரவக் கொலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை அனைத்துமே குடும்பத்தின் கௌரவத்தைக் கெடுத்ததாகக் கூறியே செய்யப்படுகின்றன. மேற்கு நாடுகளில் குடியேறியவர்களின் பிள்ளைகள் மேற்கத்திய கலாசாரத்தைப் பின்பற்றுவதும் இவ்வாறான கொலைகளுக்குக் காரணமாகிறது. தனது மகள் அழகு சாதனங்களைப் பாவிப்பதால், அவள் அணிய வேண்டுமென்று தான் வொல்லும் ஆடைகளுக்குப் புறம்பானவற்றை அவண் அணிந்தால், அல்லது பையனொருவனுடன் சுற்றித் திரிந்தால் தனது கௌரவம் மழுங்கடிக்கப்படுவதாகத் தான் கருதுவேனென்று பர்மிங்ஹாம் வீடுகளில் பி.பி.ஸி.செய்தி ஒளிபரப்புக்காக நடத்தப்பட்ட நேர்காணலில் ஒருவர் தெரிவித்தார். 2003ஆம் ஆண்டு பிரிட்டனில் முஸ்லிம் வர்த்தகரான முஸ்தாக் அஹமத் என்பவர் தனது மகளின் 22 வயதுக் காதலரான றெக்சாப் ஹசானி என்ற அல்பேனியரைக் கொன்றார். இந்த 40 வயது முஸ்லிம் வர்த்தகருக்குத் தனது மகளின் காதல் உறவு பிடிக்காமையே கொலைக்குக் காரணம்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைக் கிராமமான பரச்சினார் என்ற இடத்திலுள்ள ஹோட்டலொன்றில் வைத்து மனோவியாதிக்கான பதினாறு வயதுச் சிறுமியான லால் ஜமீலா மண்டோகல் என்பவர் கீழ் வகுப்பைச் சேர்ந்த அரசாங்க இலிகிதர் ஒருவரால் பல தடவைகள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டாள். அந்தச் சிறுமியின் மாமனார் இது குறித்துச் சட்ட அமுலாக்கல் பிரிவினரிடம் முறையிட்டார். அவளைப் பாதுகாப்புப் பராமரிப்பில் வைத்திருந்தவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. சிறுமியும் அவளின் பழங்குடியினரிடம் கையளிக்கப்பட்டாள். அந்தச் சிறுமி தம்மை அவமானத்துக்கு உள்ளாக்கிவிட்டாளென்று பழங்குடியினர் பொதுவான ஒரு முடிவுக்கு வந்தனர். இந்த அவமானத்தைப் போக்குவரத்திற்கு அவளைக் கொல்வதே ஒரே வழியென்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். பழங்குடி மக்கள் கூடியிருந்த இடமொன்றில் வைத்து அவள் சுட்டுக்கொல்லப்பட்டாள்.

ஒழுக்க வரம்பை மீறி உறவில் ஈடுபட்டாளென்ற மிகவும் மோசமான சந்தேகச் சூழ்நிலையில் பிடிபடும் பெண்ணொருத்தியைக் கொலை செய்யும் கணவனையோ அல்லது மிக நெருங்கிய இரத்த உருத்து உள்ள உறவினரையோ தண்டனையிலிருந்து முற்றுமுழுதாக விடுவிக்க முடியுமென்று ஜோர்டான் குற்றவியல் சட்டத்தின் 340 ஆவது சரத்து கூறுகிறது. "ஒருவர் பிழையான, ஆபத்தான செயலில் ஈடுபட்டதன் விளைவாக ஆத்திர மிகுதியால் குற்றம் செய்யும் எவரேனும் நீதியைப் பிரயோகிக்கலாமென்று குற்றவியல் சட்டத்தின் 98 ஆவது சரத்துக் குறிப்பிடுகிறது. இது கொலைக் குற்றத்துக்கான தண்டனையைக் கணிசமாகக் குறைக்கலாம். தமது கணவரல்லாத இன்னொருவருடன் பாலியல் உறவில் ஈடுபடும் நெருக்கமான உறவுப் பெண்ணை, அதாவது மனைவியை, சகோதரியை அல்லது மகளை கொலை செய்ததற்குக் குற்றவாளியாகக் காணப்படும் நபருக்கு மிதமான தண்டனையை வழங்கலாமென்று சிரிய நாட்டுச் சட்டத்தின் 548 ஆவது ஷரத்துக் குறிப்பிடுகிறது. இதேபோன்று துரோகம் செய்த உறவுப் பெண்ணொருத்தியைக் கொலை செய்யும் மனிதனுக்கு குறைந்தபட்சத் தண்டனை வழங்கலாமென 242 ஆவது ஷரத்து குறிப்பிடுகிறது.

பாகிஸ்தானிய குற்றவியல் சட்டத்தின்படி, கௌரவக் கொலைகள் கொலைகளாகவே கருதப்படுகின்றன. ஆனால் அந்தச் சட்டத்தில் ஒருகுறைபாடும் இருக்கிறது. சாதாரணமாக கொல்லப்படும் பெண்ணின் உறவி னரான கொலையாளியுடன் அந்தப் பெண்ணின் குடும்பத்தவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியும். இந்தச் சட்டத்தை மாற்றுவதற்காக இயக்கங்கள் முன்னெடுக்கப்படுவதாக பாகிஸ்தானைச் சேர்ந்த மனித உரிமைச் சட்டத்தரணியான ஹினா ஜிலானி கூறுகிறார்.

இவ்வாறு குடும்ப கௌரவத்தைப் பேணுவதற்காகப் பிரிட்டனில் ருக்ஷானா நாஸ் என்ற பெண் படுகொலை செய்யப்பட்டாள். இவளின் தாயாரான ஷகீலா அவளை நிலத்தில் அமர்த்திப் பிடித்திருக்க அவளின் சகோதரன் பிளாஸ்ரிக் வயரினால் கழுத்தை நெரித்துக் கொன்றான். தனது திருமணப் பந்தத்தை முறித்துக் கொண்டு, தன்னைக் கர்ப்பிணியாக்கிய காதலரைத் திருமணம் செய்ய அவள் விரும்பியதே அவள் கொல்லப்பட்டமைக்குக் காரணமாகும். இந்தக் கொலைக் குற்றத்துக்காக தாய்க்கும் மகனுக்கும் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. நுஸியாற் கான் என்ற பெண்ணும் பிரிட்டனில் கொலை செய்யப்பட்டாள். அவள் விவாகரத்துப்பெற முயற்சி செய்ததால், ஆத்திரம் கொண்ட அவளது தந்தை அவளது மூன்று வயது மகள் பார்த்துக் கொண்டிருக்கத் தக்கதாக மூச்சுத் திணறடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள். அந்தத் தந்தை பாகிஸ்தானுக்குத் தப்பியோடி விட்டாரென்று நம்பப்படுகிறது. ஸ்கொட்லான்ட் யார்ட் பொலிசாரின் மிகவும் தேடப்பட்டுவரும் நபர்களின் பட்டியலில் இந்த மனிதரும் இருக்கிறார்.

பாகிஸ்தானில் இடம்பெறும் கௌரவக்கொலைகள் வருடாந்தம் அதிகரித்து வருகின்றன. இருந்தாலும் பெண்களைத் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டங்களைப் பாகிஸ்தானியப் பாராளுமன்றம் வலுப்படுத்தியுள்ளது. "ஆனாலும் இச்சட்டங்களை அமுல்படுத்துவது இன்னமும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகிறது" என்றார் 'போலோ பி' என்ற மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த ஷானா சலீம் என்ற பெண்மணி. "காலம் கடந்த சிந்தனைகள் மக்களிடம் இருக்கும் வரை, கொலையாளிகளை மன்னிக்கக் கூடிய வசதி, வாய்ப் புகள் நெருங்கிய உறவினர்களுக்கு இருக்கும் வரை கடுமை யான சட்டத்தை அமுலாக்குவது என்பது மிகவும் கடினமான விடயம்" என்கிறார் பெண்ணிலைவாதியான ஷானா சலீம்.



பெற்றோரால் அசிட் வீசி கொல்லப்பட்ட 5 வயதுச் சிறுமி அன்வு ஷா

# சிரியாவில் புரட்சிப்படையினரின் காட்டு மிராண்டித்தனம்

சிரியாவில் அதிபர் அசாத்திற்கெதிரான போராட்டத்தில் புரட்சிப் படையினர் வெற்றி பெற்று வந்தாலும் அவர்களின் செயல்கள் மனித நேயத்திற்கு எதிரானதாக காணப்படுகிறது.

மக்கள் புரட்சி என்ற பெயரில் நடக்கும் இக்கொடூரத் தாக்குதல்களை காணும் எந்தவொரு மனிதனும் கண்டிப்பாக மனம் வருந்துவான்.

சமீபத்தில் 12 பேர் கொண்ட அரசப் படை யினரை சரமாரியாக



சுட்டுக்கொலை செய்யும் காட்சிகள் யுரியூப்பில் வெளியானது.

அதற்குள் கடந்த 3ம் திகதி சிரியாவில் இடம் பெற்ற மற்றொரு சம்பவம் மனதை பதற வைக்கிறது.

புரட்சிப்படையை சேர்ந்தவர்கள் கையில் துப்பாக்கியோடு அரச படையைச் சேர்ந்தவர்களை சரமாரியாக காலால் அடித்து உதைக்கிறார்கள்.

மனிதனை மனிதன் என்று கூட கருதாமல் இவர்களின் இச்செயல்கள் ஐ.நா பார்வைக்கு தென்பட்டும் நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறுவதற்கான காரணம்? என்ன என்ற கேள்வியும் எழுகிறது.

# 14 வயது மாணவனுடன் தவறான உறவு: கர்ப்பமான ஆசிரியை

அமெரிக்காவில் தன்னிடம் படித்த 14 வயது மாணவனுடன் தவறான முறையில் உறவு வைத்திருந்த ஆசிரியை கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் டெக்ஸாஸில் உள்ள பெஸ்கார் கன்ட்ரி பகுதியில் உள்ள பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிபவர் அமன்டா சோடலோ.

இவருக்கும், இவரிடம் படித்த 14 வயது மாணவனுக்கும் தவறான உறவு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் ஆசிரியை அமன்டா கர்ப்பமானார்.

இதை குறித்த மாணவன் தன் சக நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டதால், வெளியே தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து ஆசிரியை கைது செய்யப்பட்டார். இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட ஆசிரியை தற்போது ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

# ரத்தத்தில் இருந்து செங்கல் தயாரிப்பு: சர்ச்சையை கிளப்பியுள்ள நிபுணர்

லண்டனை சேர்ந்த ஜேக் மன்றோ ரத்தத்தில் செங்கல்லை தயாரித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

லண்டனை சேர்ந்த கட்டிடக்கலை நிபுணரான ஜேக் மன்றோ, அனைத்து வகையான செங்கற்களையும் கொண்டு கட்டிடங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர்.

கட்டுமானத்தில் அடிக்கடி புதுமையை புகுத்தி வரும் இவர் தற்போது சர்ச்சைக்குரிய செங்கல்லை தயாரித்துள்ளார்.

26 வயதான ஜேக் மன்றோ விலங்குகளை வெட்டி இறைச்சி தயாரிக்கும் தொழிற்கூடங்களில் இருந்து ரத்தத்தை ஒட்டுமொத்தமாக வாங்கியுள்ளார்.



இதனை மணலுடன் கலந்து செங்கல் போன்று தயாரித்து, அவற்றை மின் அடுப்பில் 70 டிகிரி வெப்பநிலையில் சுமார் ஒரு மணி நேரம் வேக வைத்து பதப்படுத்துகிறார். ஒவ்வொரு ரத்த செங்கல் தயாரிப்பதற்கும் அவர் 35 லிட்டர் ரத்தத்தை பயன்படுத்துகிறார்.

இதுபற்றி ஜேக் கூறுகையில், இந்த செங்கல் தண்ணீர் புக முடியாத அளவுக்கு மிகவும் கெட்டியாக உள்ளது. இரும்பு கம்பிக்குப் பதில் இதனை பயன்படுத்த முடியும். மேலும் இந்த செங்கற்களைக் கொண்டு எகிப்தில் முன்மாதிரியான ஒரு கட்டுமானத்தை நிர்மாணிக்க திட்டமிட்டிருக்கிறேன்.


இருப்பினும் இந்த செங்கற்களை கொண்டு வீடு கட்டினால் அதில் மக்கள் வசிக்க விரும்புவார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றார்.

# அமெரிக்காவை மிரட்டும் புதிய புயல் சின்னம்

சமீபத்தில் சான்டி புயல் அமெரிக்காவையே புரட்டி போட்ட நிலையில், தற்போது புதிய புயல் சின்னம் உருவாகி உள்ளது.

கடந்த வாரம் வீசிய சான்டி புயல், அமெரிக்காவை நிலைகுலைய செய்து விட்டது.

இந்நிலையில் வருகிற வாரத்தின் பிற்பகுதியில் அமெரிக்காவின் வடகிழக்கு கடற்கரை பகுதியில் மற்றொரு புயல் வீசும் என வானிலை ஆய்வு மையம்



எச்சரித்துள்ளது.

மேலும் அட்லாண்டிக் மத்திய கடல் மற்றும் புதிய இங்கிலாந்து கடல் பகுதியில் மணிக்கு 50 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசும்.

மரங்கள்-மின் கம்பங்கள் சாயலாம், பல அடி உயரத்திற்கு ராட்சத கடல் அலைகள் எழும்பும், கடும் பனிப்பொழிவும் இருக்கும். மொத்தத்தில் சான்டிக்கு நிகரான பாதிப்பை விளைவிக்க கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை வெறும் கண்ணால் பார்க்க நாசா ஏற்பாடு

பூமிக்கு மேலே சுற்றிவரும், சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை (ஐ.எஸ்.எஸ்.,) தொலைநோக்கி உதவியில்லாமல், வெறும் கண்ணால் பார்க்க நாசா ஏற்பாடு செய்துள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட, பல நாடுகள் ஒன்றிணைந்து, பூமிக்கு மேல், 410 கி. மீ.உயரத்தில், சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன.

இந்த செயற்கை விண்வெளி நிலையத்தில், விண்வெளி வீரர்கள் தங்கி, ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர், பிராண வாயு போன்றவை, ர்'யா மற்றும் அமெரிக்க விண்கலங்கள் மூலம், சப்ளை செய்யப்பட்டு வருகின்றன. பிரகாசமான இந்த ஐ.எஸ்.எஸ்., ஒரு நாளைக்கு 15 முறை பூமியை சுற்றி வருகிறது.

450 டன் எடையுள்ள, இந்த விண்வெளி ஆய்வு நிலையத்தை, வெறும் கண்ணால் பார்க்க, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக நாசா ஏற்பாடு செய்துள்ளது.நாசா, இணைய தளத்தில், தங்கள் வீட்டு முகவரியை, பதிவு செய்வோருக்கு, ஐ.எஸ்.எஸ்., அவர் வீட்டருகே பறக்கும் நேரம், எஸ்.எம்.எஸ்., மூலம் தகவல் தெரிவிக்கப்படும். இதன் மூலம், சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை, தொலைநோக்கி உதவியின்றி, வெறும் கண்ணால் காண முடியும்.

# உலக பார்வை

## சான்டி புயலின் எதிரொலி: உலக நாடுகளுக்கு ஹைட்டி நாட்டின் பிரதமர் கோரிக்கை

சான்டி புயலால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள எங்களுக்கு உதவி செய்யுங்கள் என உலக நாடுகளுக்கு ஹைட்டி நாட்டின் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கரிபீயன் நாடுகளில் ஒன்றான ஹைட்டி நாட்டை சமீபத்தில் வீசிய சான்டி புயல் மிக கடுமையாக தாக்கியுள்ளது.

இந்த புயலுக்கு 50 பேர் உயிரிழந்ததுடன், பயிரிடப்பட்ட 70 சதவிகித விளைநிலங்களும் தண்ணீரில் மூழ்கி உள்ளன.

இதனால் கடுமையான உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் தண்ணீர் நிரம்பியுள்ளதால் காலரா அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்பிலிருந்தே இன்று வரையிலும் மீண்டு



வராமல் இருக்கும் ஹைட்டிக்கு, சான்டி புயல் பலத்த அடியாக உள்ளது.

அந்நாட்டில் இதுவரையிலும் காலரா நோய்க்கு மட்டும் 7,500 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் தங்கள் நாட்டின் பேரழிவை சரிசெய்ய உலக நாடுகள் உதவ வேண்டும் என பிரதமர் லாரண்ட் லாமோத் கோரிக்கை விடுத்துள்ளார்.



லியோ அதிபர் சௌமாலி சாயாசோன்(வலது), லியோவில் நடைபெற இருக்கும் ஏ.எஸ்.இ.எம். மாநாட்டில் கலந்து கொள்ள சென்ற தாய்லாந்தின் பிரதமர் சின்வத்ராவை வாழ்த்தி வரவேற்றார்.

## கட்டிப்பிடித்து உறங்க மட்டும்: புதுவிதமான முறையில் பணம் சம்பாதிக்கும் பெண்

நியூயோர்க்கைச் சேர்ந்த ஜெக்கி செமுவெல் என்ற இளம் பெண் வித்தியாசமான முறையில் பணம் சம்பாதித்து வருகிறார்.

நியூயோர்க்கின் ரோசெஸ்டர் பகுதியை சேர்ந்தவர் ஜெக்கி செமுவெல். தனது வீட்டில் இருந்தபடியே இந்த தொழிலை செய்து வருகிறார். இதற்கு அவர் வைத்துள்ள பெயர் The Snuggery ஆகும். இதற்காக அவர் வசூலிக்கும் தொகை 35 பவுண்ஸ்களாகும்.

எந்தவித உறவும் வைத்துக் கொள்ளாமல் வெறும் கட்டிப்பிடித்து உறங்குதலே இவரது தொழிலாகும். இதற்காக இணை



யத்தில் விளம்பரமும் செய்துள்ளார் ஜெக்கி.

இவரிடம் சுமார் 30 வாடிக்கையாளர்கள் வாராந்தம் வருவதாகவும், இதில் ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் இராணுவத்தில் சேவை புரிந்தோரும் அடங்குவதாக தெரிவித்துள்ளார்.

## காதலனுடன் ஊர் சுற்றிய மகள் கௌரவ கொலை

காதலனுடன் ஊர் சுற்றி திரிந்த 15 வயது சிறுமியை, அவளது பெற்றோர் திராவகம் ஊற்றி கொன்றது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ளது கோட்லி. இந்த பகுதியை சேர்ந்த முகமது ஜாபர்-சஜினின் இளைய மகள் அனுஷா(வயது 15).


இதே பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவருடன், அனுஷா ஊர் சுற்றி திரிவதாக கிராம மக்கள் அவளது பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் என கூறியுள்ள அனுஷா, தன் கையில் சூடு வைத்து கொண்டதாக அவளது தாய் தெரிவித்துள்ளர்.

இருப்பினும் அனுஷாவை வீட்டில் சேர்க்காமல், திறந்த வெளியில் தங்க வைத்துள்ளனர்.

அனுஷா கெஞ்சியும், மனமிறங்காத அவளது தாய் திராவகத்தை ஊற்றி கொன்றுவிட்டார். இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட பொலிசார், ஜாபரையும்-சஜினையும் கைது செய்துள்ளனர்.

# முல்லைப் பெரியாறு விவகாரம்: அடுத்த வருடம் இறுதிக்கட்ட விசாரணை



கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணையின் உறுதித் தன்மை குறித்து தொடரப்பட்ட வழக்கின் இறுதி விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் உறுதித் தன்மை குறித்து கேரள அரசு எழுப்பிய பிரச்சினையை அடுத்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்று உச்ச நீதிமன்றத்தில் வந்தது. அப்போது, இந்த வழக்கின் இறுதி விசாரணை பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்குள் இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை இரு மாநில அரசுகளும் (தமிழகம், கேரளா) பரிசீலனை செய்து அதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அது குறித்து ஜனவரி 28ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தை அணுகி விளக்கம் கோரலாம் என்றும் டி.கே.ஜெயின் தலைமையிலான 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு உத்தரவிட்டனர்.

# இந்திய செய்திகள்

## பொலிவுட் நடிகை பிரீத்தியின் கற்பழிப்பு வழக்கு தள்ளுபடி





பொலிவுட் இயக்குநர் மதூர் பண்டார்க்கர் மீது நடிகை பிரீத்தி ஜெயின் தொடர்ந்த கற்பழிப்பு வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.


கடந்த 1999ஆம் ஆண்டு பாலிவுட் நடிகை பிரீத்தி ஜெயினை கற்பழித்ததாக மதூர் பண்டார்க்கர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இது குறித்து நடிகை பிரீத்தி ஜெயின், 1999- 2004ம் ஆண்டு வரை தன்னை 16 முறை கற்பழித்ததாகவும் திருமணம் செய்து கொள்வதாக் கூறி பின்னர் ஏமாற்றியதாகவும் தனது புகாரில் கூறியிருந்தார்.

இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்குப் பொய்யானது என்றும், இரத்து செய்யுமாறும் உச்சநீதிமன்றத்தில் மதூர் பண்டார்க்கர் மனு செய்திருந்தார்.

இந்நிலையில் இன்று இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், கற்பழிப்பு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

# மும்பையில் ஜேர்மனி பெண் கத்தி முனையில் கற்பழிப்பு



ஜேர்மனியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் மும்பையில் கத்தி முனையில் கற்பழிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த இளம் பெண், கடந்த யூன் மாதம் தன் தோழியுடன் மும்பை வந்து பாந்த்ரா பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் தங்கினார்.

சில நாட்களுக்கு முன்பு இவரது தோழி கேரளாவுக்கு சென்று விட்டார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை ஜன்னல் வழியாக இவரது வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர் அந்த பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினான்.


அதன்பின்பு அந்த பெண்ணை கத்தி முனையில் கற்பழித்து விட்டு வீட்டில் இருந்த கமெரா, பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து தப்பி ஓடி விட்டான்.

இது குறித்து ஜேர்மனி பெண் பொலிசுக்கு புகார் கொடுத்தார்.

பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மும்பை பாந்த்ரா, பணக்காரர்கள் அதிகம் வசிக்கும் பலத்த பாதுகாப்பு உள்ள பகுதியாகும்.

இந்த பகுதியில் வெளிநாட்டு பெண் கற்பழிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் நலன் கருதி அவரின் பெயரை பொலிஸார் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




தீபாவளியை, முன்னிட்டு, தீபம் ஏற்றுவதற்காக, அகல் விளக்குகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெண்கள்.

### அகிலேஷ் யாதவ் மனைவிக்கு நோட்டீஸ்:

# முதல்வரின் மனைவி என்ற பயம் இருந்தால் வீட்டு சுவற்றில் ஒட்ட நீதிமன்றம் உத்தரவு

உ.பி., முதல்வர் அகிலேஷ் யாதவின் மனைவி, டிம்பிளிடம் நோட்டீஸ் அளிக்க பயமாக இருந்தால், நோட்டீசை, அவரது வீட்டுச் சுவரில் ஓட்டுங்கள் என, உ.பி., அதிகாரிகளுக்கு, அலகாபாத் ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. உ.பி.யில், அகிலேஷ் யாதவ் தலைமையிலான, சமாஜ்வாதி கட்சி ஆட்சி நடக்கிறது. அகிலேசின் மனைவி, டிம்பிள் யாதவ், ஜூன் மாதம் நடந்த, கன்னோஜ் லோக் சபா இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார்.இவரது வெற்றியை ரத்து செய்யக்கோரி, பிரபாத் குமார் பாண்டே என்பவர், அலகாபாத் ஐகோர்ட்டில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அவரது மனு:கன்னோஜ் இடைத்தேர்தலில், டிம்பிள் யாதவை எதிர்த்து போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்யச் சென்றேன். கடைசி நேரத்தில், என்னை வேட்பு மனு தாக்கல் செய்ய விடாமல், சமாஜ்வாதி கட்சியினர் தடுத்து விட்டனர்.



டிம்பிளை எளிதாக வெற்றி பெறச் செய்யும் நோக்கத்தில், சமாஜ்வாதி கட்சியினர் என்னை தடுத்தனர். எனவே, டிம்பிளின் வெற்றி செல்லாது என, அறிவிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.இது தொடர்பாக விளக்கம் கேட்டு, அலகாபாத் ஐகோர்ட், டிம்பிளுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. இந்த மனு, நேற்று விசாரணைக்கு வந்த போது, பிரபாத் குமார் பாண்டே கூறுகையில், நோட்டீஸ் அனுப்ப வேண்டியவர், முதல்வரின் மனைவி என்பதால், அவரிடம் நோட்டீஸ் அளிப்பதற்கு அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர், என்றார்.இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: வழக்கு விசாரணை விரைவாக நடக்க வேண்டும். டிம்பிள் யாதவுக்கு உடனே நோட்டீஸ் அளிக்க வேண்டும். அவரிடம் நோட்டீஸ் அளிப்பதற்கு தயக்கமாக இருந்தால், அவரது வீட்டுச் சுவரில் நோட்டீசை ஓட்டுங்கள்.இவ்வாறு நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

### தாஜ் வணிக வளாக ஊழல்:

# முறைகேடு மாயாவதிக்கு எதிரான மனுக்கள் தள்ளுபடி

தாஜ் வணிக வளாக ஊழல் தொடர்பான வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட, உ.பி., மாநில முன்னாள் முதல்வர், மாயாவதிக்கு எதிராக தொடரப்பட்ட பொது நல மனுக்களை, அலகாபாத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உ.பி., முதல்வராக மாயாவதி இருந்த போது, 2002ம் ஆண்டு, ஆக்ரா நகரிலுள்ள உலகப் புகழ் பெற்ற தாஜ் மகால் அமைத்துள்ள பகுதியை அழகுபடுத்த திட்டமிடப்பட்டது.

இதற்கு, 17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம், சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் நடக்கிறது. இதில், முறைகேடுகள் நடப்பதாகவும், கூறி மாயாவதி மீது வழக்கு தொடுக்க வேண்டும் என, எதிர்க் கட்சிகள் கோரிக்கை வைத்தன. இதை, மாயாவதி அரசு நிராகரித்தது. இதையடுத்து, 2003ஆம் ஆண்டில் சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதில், மாயாவதி அரசு மீது விசாரணை நடத்தும்படி, சி.பி.ஐ.,க்கு, சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. மாயாவதி மற்றும், உ.பி., மாநில அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த, அனுமதிக்க மாட்டோம் என, மாநில அரசு மறுப்பு தெரிவித்தது. இதனால், 2007ம் ஆண்டு சி.பி.ஐ., விசாரணை கைவிடப்பட்டது. இந்நிலையில், மாயாவதி மற்றும் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த நச்முதீன் சித்திக் ஆகியோர் மீது விசாரணை நடத்த வேண்டும் என, கோரி அலகாபாத் உயர் நீதிமன்றத்தில், ஏழு பொது நல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் அனைத்தையும், ஒன்றாக இணைத்து, நேற்று அலகாபாத் உயர்நீதிமன்றம் விசாரித்தது. மாயாவதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சதிஷ் சந்தர மிஸ்ரா வாதிடுகையில், இந்த மனுக்கள் அரசியல் நோக்கத்திற்காக, கெட்ட நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், இம்தியாஸ் முர்தசா, அஷ்வினி குமார் ஆகியோர், பொது மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தனர்.

# 16 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் சம்பியன்

யாழ். தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்டப் போட்டிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 16 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெற்றிபெற்று சம்பியனாகியது.

16 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் வசாவிளான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் வசாவிளான் அணி வீரர் விஜிதரன் முதலாவது கோலினைப் போட்டார். இந் நிலையில், முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி தடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதனால் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி கோல் எதனையும் போடமுடியவில்லை.

ஆனாலும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய வீரர் ரெலன்ஸன் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது அணிக்காக மேலும் ஒரு கோலினை போட்டார்.

இறுதியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 2 : 0 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பியனாகியது.



## தேசிய கராத்தே போட்டியில் கிழக்கிலிருந்து 85 பேர் பங்கேற்பு

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று முதல் வெள்ளிக்கிழமை வரை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ள தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாணத்திலிருந்து 85 போட்டியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதனை கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் முஹமட் இக்பால் தெரிவித்துள்ளார்.

இதன்போது 6-13 வயதுக்கிடைப்பட்ட பிரிவிலும், 14-15 வயது கடேற் பிரிவிலும், 16-17 வயது கனிஷ்ட பிரிவிலும், 18 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரிவிலும் பட்டி நிறம், நிறை அடிபபடையில் போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட சுற்றுப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

## பந்து வீச்சாளர்களைப் பாதிக்கும் புதிய விதிகள்

### - மஹேல ஜெயவர்த்தன

சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தால் (ஐ.சி.சி) ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பந்துவீச்சாளர்களுக்கு எதிரானதாக உள்ளதாக இலங்கை அணியின் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தின் புதிய மாற்றங்களின்படி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பவர் பிளே அல்லாத ஓவர்களில் 30 யார் வட்டத்திற்கு வெளியே 4 வீரர்களை மட்டும் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இது 5 களத்தடுப்பாளர்களாகக் காணப்பட்டது.

இது குறித்து துடுப்பாட்ட வீரரான ஜெயவர்த்தன கூறுகையில், இந்த மாற்றம் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பெரிதும் சாதகமாக உள்ளது. ஆனால், இந்த மாற்றம் கிரிக்கெட்டிற்கு எதிரானது என்றும், சுழற்பந்து வீச்சாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2வது ஒருநாள் சர்வதேசப் போட்டியிலேயே முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், அப்போட்டியில் இலங்கை அணி டக்வொர்த் லூயிஸ் முறையில் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்டை விளையாடதவர்கள் கிரிக்கெட் பற்றி விமர்சனம் செய்வதை ஏற்க முடியாது

### - ஹர்பஜன் சிங்

இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ள ஹர்பஜன் சிங் தன் மீதான விமர்சனங்களை எதிர்த்துள்ளதோடு, கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியே இருக்காதவர்கள் விமர்சனங்களைப் புரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான அணிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வணியில் ஹர்பஜன் சிங் சேர்க்கப்பட்டுள்ளார். ரஞ்சிக் கிண்ணத் தொடரின் பஞ்சாப் அணி சார்பான முதலாவது இனிங்ஸில் அவர் 21 ஓவர்கள் பந்துவீசி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருக்காத நிலையில் அவரது தெரிவு இடம்பெற்றிருந்தது.

இதன் காரணமாக ஹர்பஜன் சிங்கின் தெரிவு தொடர்பாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டதுடன், அவரது தெரிவு சரியாதல்ல எனவும் ஒருசாராரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இது குறித்துத் கருத்துத் தெரிவித்துள்ள ஹர்பஜன் சிங், பந்துவீச்சாளரொருவரின் பந்து வீச்சுத் திறமை அவர் கைப்பற்றும் விக்கெட்டுக்களால் மாத்திரம் கணிக்கப்படக்கூடாது எனவும், அவர் அப்போட்டியில் பந்து வீசிய விதத்தைக் கொண்டே கணிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். சுழற்பந்து வீச்சாளரொருவரின் பணி ஆடுகளத்திற்கேற்றவாறு மாறுபடுகிறது எனத் தெரிவித்த ஹர்பஜன் சிங், கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியேயிருக்காத சிலர் தன் மீதான விமர்சனங்களை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது



இந்தியாவின் நட்சத்திர பேட்மிண்டன் வீராங்கனையான சாய்னா நெஹ்வால் சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்று அசத்தினார். இவருக்கு அலிகாரில் உள்ள மங்களயட்டன் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

இந்த பல்கலைக்கழகம் சாய்னாவுக்கு மட்டுமல்லாது ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற சுஷில் குமார், யோகேஷ்வர் தத் (மல் யுத்தம்), விஜயகுமார், ககன் நரங் (துப்பாக்கி சுடுதல்), மேரிகோம் (குத்துச்சண்டை) ஆகியோருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. டாக்டர் பட்டம் குறித்து சாய்னா கூறுகையில், எனது பெற்றோர் என்னை மருத்துவத்துயில் புகுத்த நினைத்தனர். ஆனால் எனது வாழ்க்கை விளையாட்டுத் துறையில் அமைந்து விட்டது என்றும் இந்த டாக்டர் பட்டத்தால் எனது பெற்றோரின் கனவு நிறைவேறி உள்ளது என வும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

## மேற்கிந்திய தீவுகள் அணி முதல் 5 டெஸ்ட் தரப்படுத்தலைப் பெறத் திட்டம்:

அண்மையில் உலக ரி-20 தொடரை வெற்றி கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது உலக டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 5 இடங்களுக்குள் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இலக்காகக் கொண்டு செயற்படுவதாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

உலக ரி-20 தொடரை வெற்றி கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ளது. 7ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியானது 9ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள பங்களாதேஷ் அணியையே சந்திக்கவுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த ஒற்றிஸ் கிப்ஸன், 2012 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், இவ்வாண்டைச் சிறப்பான நிலையில் முடித்துக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் அணி தங்களை விடத் தாழ்வான நிலையில் காணப்படுவதால் பங்களாதேஷிற்கெதிரான தொடரில் தங்களால் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்ற போதிலும், அடுத்த 12 மாதங்களுக்குள் டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 5 இடங்களுக்குள் இடம் பெறுவதே தங்கள் இலக்காகக் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷிற்கெதிரான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் மாயச்சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் சிறப்பாகச் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஒற்றிஸ் கிப்ஸன், சுனில் நரைன் விரைவாகக் கற்கும் திறனுடைய ஒரு பந்து வீச்சாளர் எனத் தெரிவித்தார்.

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு வைத்து 2 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஒரு டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 07.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது